14.12.2016

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## பொறையாறு பகுதியில் பாசனத்திற்கு தண்ணீர் இன்றி காய்ந்துவரும் நெற்பயிர்கள் விவசாயிகள் கவலை



பொறையாறு பகுதியில் பாசனத்திற்கு தண்ணீர் இன்றி நெற்பயிர்கள் காய்ந்து வருகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர் .

காய்ந்துவரும் நெற்பயிர்கள்

மேட்டூர் அணையில் இருந்து இந்த ஆண்டு காவிரி டெல்டா பாசனத்திற்காக கடந்த செப்டம்பர் மாதம் 20-ந் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது அப்போது தரங்கம்பாடி தாலுகாவுக்கு உட்பட்ட . மஞ்சலாறு, வீரசோழன்ஆறு, மகிமலையாறு மற்றும் அதன் கிளை ஆறுகளில் தண்ணீர் வந்தது இதனை நம்பி ப .ொறையாறு மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள் சுமார் 150 ஏக்கரில் சம்பா நெற்பயிரை நேரடி விதைப்பு மற்றும் நடவு செய்து இருந்தனர் இந்த .

நிலையில் போதுமான அளவு மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படாததால் ஆறுகளில் தண்ணீர் வருவது நின்றுவிட்டது . இதனால் விவசாயிகள் சம்பா நெற்பயிர்களை காப்பாற்றும் வகையில் குளம், குட்டைகளில் இருந்த தண்ணீரை மோட்டார் பம்புசெட் மூலம் இரைத்து பாசனத்திற்கு பயன்படுத்தி வந்தனர் இதனால் குளம் ., குட்டைகளில் இருந்த தண்ணீரும் வற்றிவிட்டது மேலும் ., இந்த ஆண்டு பருவமழை பெய்யாததால் நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து பாசனத்துக்கு தண்ணீர் இன்றி மேற்கண்ட பகுதியில் சம்பா நெற்பயிர்கள் காய்ந்து வருகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர் .

வயல்களில் உப்புநீர்

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில் , காவிரிநீர் மற்றும் பருவமழையை நம்பி சம்பா சாகுபடி செய்தோம் வடகிழக்கு பருவமழை . பொய்த்துவிட்டதாலும், வழக்கம்போல் இந்த ஆண்டும் காவிரி ஆற்றில் தண்ணீர் வராததால் சம்பா நெற்பயிர்கள் காய்ந்து வருகின்றன . பொறையாறு சுற்று வட்டார கடைமடை பகுதியில் நிலத்தடிநீர், உப்புநீராக மாறி உள்ளது (போர்வெல்) இதனால் பம்புசெட் மூலம் . நிலத்தடிநீரை இரைத்து பாசனத்திற்கு பயன்படுத்த முடியாத நிலை மேலும் .ஏற்பட்டுள்ளது, தரங்கம்பாடி பகுதியில் கடல் சீற்றமாக இருப்பதால் கடல்நீர் முகத்துவாரம் வழியாக ஆறுகளில் உட்புகுந்துள்ளது. . இந்த தண்ணீர் வடிகால் வாய்க்கால் மூலம் வயல்களில் கலந்துள்ளது இதனால் தரங்கம்பாடி தாலுகாவுக்கு உட்பட்ட பொறையாறு , திருக்கடையூர், தில்லையாடி, காழியப்பநல்லூர், மாமாகுடி, காலமநல்லூர், பிள்ளைபெருமாநல்லூர், காட்டுச்சேரி, திருக்களாச்சேரி, மாணிக்கப்பங்கு, கிள்ளியூர், இலுப்பூர், விசலூர், திருவிடைக்கழி உள்ளிட்ட பகுதியை சேர்ந்த விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் பலத்த மழை பெய்தால் . இதனால் பருவ . மட்டுமே வயல்களில் உள்ள உப்புநீர் வெளியேறும் .மழையை எதிர்பார்த்து உள்ளோம் என்றனர்

## பாசனத்துக்கு தண்ணீர் இல்லாததால் நேரடி விதைப்பு செய்த வயல்களில் களைகள் முளைத்து நெற்பயிர்கள் பாதிப்பு நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை



பாசனத்துக்கு தண்ணீர் இல்லாததால் நேரடி விதைப்பு செய்த வயல்களில் களைகள் முளைத்து சம்பா நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனவே . நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை .விடுத்துள்ளனர்

சம்பா நெற்பயிர்கள் பாதிப்பு

தமிழக அரசு ஆண்டுதோறும் சம்பா சாகுபடி செய்ய ஜூன் மாதம் 12-ந் தேதி தண்ணீர் திறந்துவிடுவது வழக்கம் ஆனால் ., கடந்த சில ஆண்டுகளாக மேட்டூர் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால், சம்பா சாகுபடி செய்வதற்கு தமிழக அரசு காலம் தாழ்த்தி மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடுகிறது இதேபோல் . இந்த ஆண்டும் பாசனத்துக்கு காலம் தாழ்த்தி தண்ணீர் ஆனால் .திறந்துவிடப்பட்டது, தற்போதுவரை கடைமடை பகுதியான சீர்காழி தாலுகா பகுதிக்கு காவிரிநீர் வந்துசேரவில்லை இந்த நிலையில் . காவிரிநீரை நம்பி சீர்காழி, எடகுடிவடபாதி, காரைமேடு, சூரக்காடு,

வைத்தீஸ்வரன்கோவில், சட்டநாதபுரம், செம்மங்குடி, கடவாசல், வடகால், எடமணல், வழுதலைக்குடி, தாழந்தொண்டி, தொடுவாய், ஆமப்பள்ளம், வரிசைப்பத்து, அரசூர், எருக்கூர், அத்தியூர், பட்டவிளாகம், பனிக்கிருப்பு, விளந்திடசமுத்திரம், பனமங்கலம், குமாரநத்தம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் சம்பா நெற்பயிரை நேரடி விதைப்பு செய்து இருந்தனர் தற்போது காவிரி ஆற்றில் தண்ணீர் இல்லாததாலும் ., வடகிழக்கு பருவமழை பெய்யாததாலும் பாசனத்திற்கு தண்ணீர் இன்றி வறட்சியால் நேரடி விதைப்பு செய்த வயல்களில் களைகள் அதிக அளவில் முளைத்து நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன இதனால் பாதிக்கப்பட்ட . .விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்

நிவாரணம்

இதுகுறித்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூறியதாவது-:

கடந்த சில ஆண்டுகளாக பாசனத்துக்கு போதிய அளவு தண்ணீர் இல்லாமல் விவசாயம் பாதிக்கப்பட்டு வந்தது இதனால் நஷ்டம் ஏற்பட்டு . பாதிக்கப்பட ்டு வந்தோம் இந்த ஆண்டு விவசாயம் பாதிப்பு இல்லாமல் . ஆனால் . இருக்கும் என்று நம்பி இருந்தோம், அதற்கு மாறாக இந்த ஆண்டு காவிரி ஆற்றில் தண்ணீர் இல்லாததாலும், வடகிழக்கு பருவமழை பெய்யாததாலும் முற்றிலும் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது இதனால் . நேரடி நெல் விதைப்பு செய்த வயல்களில் அதிக அளவில் களைகள் முளைத்து சம்பா நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனவே சீர்காழி . . பகுதியை சேர்ந்த விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் எனவே, தமிழக அரசு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் நிவாரணம் . வழங்க தவறினால் விவசாயிகள் , தங்களது குடும்பங்களை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படும்.இவ்வாறு விவசாயிகள் கூறினர் .

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை6 காசுகள் உயர்வு 399 காசுகளாக நிர்ணயம்



நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 393 காசுகளாக இருந்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை 6 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 399 காசுகளாக உயர்ந்து உள்ளது.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு: – சென்னை–402, ஐதராபாத்–390, விஜயவாடா, தனுகு–392, பார்வாலா–397, மும்பை–432, மைசூரு–405, பெங்களூரு–401, கொல்கத்தா–452, டெல்லி–413.

கறிக்கோழி கிலோ ரூ. 65–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் அதன் விலையை கிலோவுக்கு ரூ.4 உயர்த்த முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ. 69–ஆக உயர்ந்து உள்ளது. முட்டைக்கோழி கிலோ ரூ. 71–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை என பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

## ராசிபுரத்தில் 1,160 பருத்தி மூட்டைகள் ரூ.23 லட்சத்திற்கு ஏலம்



ராசிபுரம்,

ராசிபுரம் வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி ஏலம் நடந்தது. குருசாமிபாளையம் , தேங்கல்பாளையம், கரடியானூர், முத்துக்காளிப்பட்டி, கட்டனாச்சம்பட்டி, சிங்களாந்தபுரம், வேலம்பாளையம், காக்காவேரி, நத்தமேடு, கண்ணூர்பட்டி, புதுச்சத்திரம் உள்பட பல இடங்களில் இருந்து விவசாயிகள் பருத்தியை ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். அண்ணூர் , தேனி, திண்டுக்கல், மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், ஆத்தூர் போன்ற இடங்களில் இருந்து வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுப்பதற்காக வந்திருந்தனர்.

இதில் ஆர்.சி.எச்.ரக பருத்தி ஒரு குவிண்டால் குறைந்த பட்சமாக ரூ.5,279–க்கும், அதிகப்பட்சமாக ரூ. 5,829–க்கும், டி.சி.எச்.ரக பருத்தி குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ. 5,870–க்கும், அதிகபட்சமாக

ரூ.6,790–க்கும் ஏலம் விடப்பட்டது. இந்த ஏலத்தில் 1,160 பருத்தி மூட்டைகள் ரூ.23 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது.

## கூடலூர் பகுதியில் நீர்ப்பனி பருவம் தவறி காபி செடிகள் பூக்க : தொடங்கின விளைச்சல் பாதிக்கும் என்பதால் விவசாயிகள் கவலை



கூடலூர் பகுதியில் நீர்ப்பனி பொழிவு இருந்த போதிலும் காபி செடிகள் பூக்க தொடங்கின பருவம் தவறி பூப்பதால் விளைச்சல் பாதிக்கும் நிலை . .உள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்

நீர்ப்பனி

நீலகிரி மாவட்டத்தில் இந்த மாத தொடக்கத்தில் இருந்து நீர்ப்பனி கொட்டி வருகிறது பகலில் கடும் வெயிலும் ., இரவில் பனிப்பொழிவும் காணப்படுகிறது இதனால் புல்வெளிகள் ., வனங்கள் கருகி வருகின்றன . மேலும் தோட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள காய்கறிகள் மற்றும் தேயிலை ஏற்கனவே போதிய மழை . செடிகள் கடும் பனியால் கருகி வருகின்றன இந்த . இல்லாமல் பச்சை தேயிலை விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது சூழலில் தற்போது கடும் நீர ்ப்பனிப்பொழிவால் விளைச்சல் மேலும் பாதிக்கும் நிலை உள்ளது.

ஆண்டுதோறும் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் காபி செடிகளில் இருந்து விதைகள் அறுவடை செய்யப்படுவது வழக்கம் இந்த காலக்கட்டத்தில் . கோடை மழை பெய்து காபி செடிகள் அடுத்த விளைச்சலுக்கு தயாராகும் வகையில் பூத்து க◌ுலுங்கும் ஆனால் தற்போது கூடலூர் பகுதியில் . ஆனாலும் காபி செடிகள் பூக்க . நீர்ப்பனி பொழிவு காணப் படுகிறது .தொடங்கி உள்ளன

விளைச்சல் பாதிக்கும்

பருவம் தவறி பூப்பதால் எந்த பயனும் இல்லை மாறாக விளைச்சல் தான் . இதனால் . பாதிக்கப்படும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்அவர்கள் கவலை அடைந்துள்ளனர் -: இது குறித்து விவசாயிகள் கூறியதாவது .

காபி விதைகள் கிலோ ரூ .75-க்கு விற்கப்படுகிறது போதிய மழை . இந்த . இல்லாமல் போனதால் விளைச்சலும் குறைந்து காணப்படுகிறது நிலையில் அறுவடை செய்யப்பட உள்ள நிலையில் கடும் பனியால் பூக்க . தொடங்கி உள்ளதுஇது காபி செடிகளுக்கு பாதிப்பை உண்டாக்கும் . காபி அறுவடை முடிவடையும் மார்ச், ஏப்ரல் காலங்களில் கோடை மழை பெய்கிற சமயத்தில் காபி செடிகள் அடுத்த கட்ட விளைச்சலுக்காக பூக்க தொடங்கும் .ஆனால் தற்போது பூத்துள்ளது எந்த பயனையும் அளிக்காது . இந்த பூக்கள் விரைவில் உதிர்ந◌்துவிடும் இதன் மூலம் விளைச்சலும் . .இவ்வாறு அவர்கள் கூறினார்கள் .பாதிக்கும் சூழல் உருவாகி உள்ளது

## விராலிமலையில் வரத்து அதிகரிப்பால் வாழைத்தார் விலை வீழ்ச்சி ஒரு தார் ரூ.20 க்கு விற்றதால் விவசாயிகள் வேதனை



விராலிமலையில் வரத்து அதிகரிப்பால் வாழைத்தார்களின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. மேலும் ஒரு தார் ரூ .20 க்கு விற்றதால் விவசாயிகள் வேதனை அடைந்தனர்.

வாரச்சந்தை

புதுக்கோட்டை மாவட்டம் , விராலிமலையில் வாரந் தோறும் திங்கட்கிழமை வாரச்சந்தை நடைபெற்று வருகிறது இந்த சந்தையில் . காய்கறிகள், மளிகை சமான்கள் போன்றவற்றை விராலிமலையை சுற்றியுள்ள கிராமங்களான கொடும்பாளூர் , மலைக்குடிப்பட்டி, இராளிப்பட்டி, பாத்திமாநகர் ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி செல்வது வழக்கம் இதில் . காலை6 மணி முதல் லால்குடி , முசிறி, குளித்தலை, லாலாப்பேட்டை, முக்கொம்பு, எட்டரை, கோப்பு போன்ற பகுதிகளில் விளையும் வாழைத்தார்களை மொத்த வியாபாரிகள் , லாரிகளில் ஏற்றி வந்து விராலிமலை வாரச்சந்தையில் விற்பனை செய்கிறார்கள் சில நேரங்களில் . . வாழைத்தர்கள் வரவு குறைவால் ரூ250 வரை பூவன் வாழைத்தார்

விற்பனை செய்யப்படுகிறது நன்க .ு விளைந்து உள்ள தார்கள் ரூ .150 வரை விற்பனையாகி வந்த நிலையில் தற்போது ஒரு தார் ரூ .20க்கு விற்பனையா னது. ஒரு தார் ரூ.20

இந்த நிலையில் வாழைத்தார் விற்பனை செய்யும் வியாபாரி ஒருவர் கூறுகையில்அறுவடை காலம் என்பதாலும் -:, நஷ்டம் அடைய விரும்பதா சில விவசாயிகள் வர்தா புயலுக்கு அஞ்சியதாலும் விராலிமலை சந்தையில் தற்போது வாழைத்தார்கள் வரத்து அதிகரித்துள்ளது.

இதனால் காலையில் வாழைத்தார் ரூ .120 என விற்பனை ஆனது நேரம் . ஆக, ஆக வாழைத்தார்கள் விலை குறைந்து கொண்டே சென்றது மாலை . . நேரத்தில் ஒரு பூவன் தார் ரூ20-க்கு விற்பனையானது என்று தெரிவித்தார் வாழைத்தார்கள் விலை வீழ்ச்சியால் விவசாயி கள் . .வேதனை அடைந்த னர்

## தஞ்சை மார்க்கெட்டுக்கு செவ்வந்திப்பூக்கள் வரத்து அதிகரிப்பு விலையும் குறைந்தது



தஞ்சை மார்க்கெட்டுக்கு செவ்வந்திப்பூக்கள் வரத்து அதிகமாக இருந்தது . .இதனால் விலையும் குறைந்தது

செவ்வந்தி பூக்கள்

தஞ்சை பூ மார்க்கெட்டிற்கு ஓசூர் , ராயக்கோட்டை, சேலம், நிலக்கோட்டை, திண்டுக்கல் உள்ளிட்ட இடங்களில் இருந்து பூக்கள் விற்பனைக்காக கொண்டுவரப்படும் இதே போல் தஞ்சையில் இருந்து . மன்னார்குடி, பட்டுக்கோட்டை, நாகப்பட்டினம், வேதாரண்யம் உள்ளிட்ட இடங்களுக்கு பூக்கள் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படும்.

தற்போது செவ்வந்தி மற்றும், காட்டுமல்லி பூக்கள் சீசன் ஆகும் இதனால் . தஞ்சை மார்க்கெட்டிற்கு . இந்த வகை பூக்கள் வரத்து அதிகமாக உள்ளது ஓசூர், ராயக்கோட்டை பகுதிகளில் இருந்து தற்போது செவ்வந்தி பூக்கள் அதிக அளவில் விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது இதனால் . . செல்வந்திப்பூக்கள் விலையும் தற்போது குறைவாக காணப்படுகிறது நேற்று1 கிலோ செவ்வந்திப்பூ ரூ .30 முதல் ரூ .40 வரை விற்பனை செய்யப்படுகிறது.

வரத்து அதிகரிப்பு

வழக்கமாக இந்த காலக்கட்டத்தில் செவ்வந்திப்பூக்கள் கிலோ ரூ .100 முதல் ரூ.150 வரை விற்பனை செய்யப்படும் ஆனால் தற்போது வரத்து . அதுவும் நேற்று .அதிகமாக இருப்பதால் விலை குறைந்து காணப்படுகிறது வார்தா . தஞ்சை மார்க்கெட்டிற்கு செவ்வந்திப்பூகள் அதிகமாக வந்தது புயல் காரணமாக சென்னையில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் அங்கு செவ்வந்திப்பூகள் எடுத்துச்செல்லப்படவில்லை இதனால் சென்னைக்கு . கொண்டு செல்லப்படும் பூக்கள் தஞ்சை உள்ளிட்ட மார்க்கெட்டிற்கு அதிக .அளவில் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன

இதே போல் வாசனை இல்லாத பூ என கூறப்படும் காட்டுமல்லி சீசன் தற்போது என்றாலும் அதன் விலை அதிகமாக காணப்படுகிறது . . வழக்கமாக இந்த வகைப்பூ தற்போது ரூ50 முதல் ரூ .100 வரை தான்

விற்பனை செய்யப்படும் . ஆனால் தற்போது ரூ .300 வரை விற்பனை செய்யப்படுகிறது இதற்கு காரணம் மல்லிகைப்பூ வரத்து குறைவாக . மல்லிகைப்பூ . இருப்பதாலும் விலை அதிகமாக காணப்படுவதாலும் தான் தற்போது கிலோரூ.400 முதல் ரூ.600 வரை விற்பனை செய்யப்படுகிறது.

பூக்கள் விலை

தஞ்சை மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படும் பூக்களின் விலை வருமாறு-:

மல்லிகை கிலோ ரூ.400 முதல் ரூ.600 வரை.செவ்வந்தி ரூ .30 முதல் ரூ.40 வரை.அரளிப்பூ ரூ .100 முதல் ரூ.150 வரை. காட்டு மல்லி ரூ .300. கேந்தி ரூ.30 முதல் 40 வரை.கனகாம்பரம் ரூ .400.

இது குறித்து பூ வியாபாரி சூசைஅடைக்கலராஜ் கூறுகையில் , "தற்போது செவ்வந்திப்பூ வரத்து அதிகமாக இருப்பதால் விலை குறைவாக உள்ளது . . மல்லிகைப்பூ இந்த காலக்கட்டத்தில் கிலோ ரூ1000-த்துக்கு மேல் விற்பனை செய்யப்படும் .தற்போது மழை இல்லாமல் வெயில் காணப்படுவதால் மல்லிகைப்பூ வரத்து இருப்பதால் கிலோ ரூ .400 முதல் ரூ.600 வரை விற்பனை செய்யப்படுகிறது சென்னைக்கு கொண்டு . செல்லப்படும் செவ்வந்திப்பூக்கள், புயல் மழை காரணமாக அங்கு எடுத்துச்செல்லப்படவில்லை இதனால் தஞ்சைக்கு அதிக அளவில் . செவ்வந்திப்பூக்கள் கொண்டுவரப்பட்டன செவ்வந்திப்பூக்கள் விலை . குறைவாக இருந்தால் விற்பனையும் அதிகமாகஇருந்தது"என்றார்.

## தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றுப்பாசன குளங்கள் வறண்டன 45 ஆயிரம் ஏக்கர் விவசாயம் பாதிப்பு



தூத்துக்குடி மாவட்டத்தில் , தாமிரபரணி ஆற்றுப்பாசன குளங்கள் தண்ணீரின்றி வறண்டதால் , 45 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்களில் விவசாயம் பாதிக்கப்பட்டு உள்ளது.

**தடுப்பணைகள்**

பொதிகை மலையில் இருந்து நெல்லை , தூத்துக்குடி மாவட்டங்களை வளம் கொழிக்கச் செய்யும் தாமிரபரணி நதியானது தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயல் கடலில் சங்கமிக்கிறது தூத்துக்குடி மாவட்டத்தில் ., இந்த நதியின் குறுக்கை கட்டப்பட்டுள்ள வல்லநாடு மருதூர் அணை , ஸ்ரீவைகுண்டம் தடுப்பணை மூலம் சுமார் 45 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன மருதூர் அணையில் இருந்து . மேலக்கால், கீழக்கால் மூலமும் , ஸ்ரீவைகுண்டம் அணையில் இருந்து வடகால், தென்கால் மூலமும் ஏராளமான குளங்களுக்கு தண்ணீர் கிடைக்கிறது.

**தென்கால் பாசன குளங்கள்**

ஸ்ரீவைகுண்டம் அணையின் தென்கால் மூலம் கடம்பாகுளம் , ஆத்தூரான் கால்வாய், சேதுக்குவாய்த்தான், நல்லூர் மேலகுளம் , நல்லூர் கீழகுளம் , ஆறுமுகநேரி, அம்மன்புரம், கானம், நாலாயிரமுடையார்குளம், நத்தகுளம், சீனிமாவடிகுளம், எல்லப்பநாயக்கன்குளம், ஆவுடையார்குளம் உள்ளிட்ட குளங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படும்.

ஸ்ரீவைகுண்டம் அணையின் வடகால் மூலம் ஆறுமுகமங்கலம் , பேய்க்குளம், பெட்டைகுளம், கோரம்பள்ளம், குலையன்கரிசல், அத்திமரப்பட்டி, கொற்கை, அகரம், பழையகாயல் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள குளங்கள் பாசன வசதி பெறுகின்றன.

**மேலக்கால், கீழக்கால்**

மருதூர் அணையின் மேலக்கால் மூலம் முத்தாலங்குறிச்சி , ஆவரைகுளம், செய்துங்கநல்லூர், தூதுகுழி, கருங்குளம், வெள்ளூர், கால்வாய், வெள்ளமடம், பிள்ளையன்மனை, ஆதிநாதபுரம், மளவராயநத்தம், தென்கரைகுளம், செம்பூர்குளம், சடையநேரி, தாங்கைகுளம், புத்தன்தருவை உள்ளிட்ட குளங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படும்.

மருதூர் அணையின் கீழக்கால் மூலம் ஸ்ரீவைகுண்டம் , பேரூர், பேட்மாநகரம், சிவகளை, பெருங்குளம், பண்ணைவிளை, பண்டாரவிளை, பற்பநாதமங்கலம், தோழப்பன்பண்ணை, ஆறாம்பண்ணை, மணக்கரை, கொங்கராயகுறிச்சி உள்ளிட்ட குளங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படும்.

ஸ்ரீவைகுண்டம் அணையின் வடகால் மூலம் சுமார் 17 ஆயிரம் ஏக்கர் நிலங்களும், தென்கால் மூலம் சுமார் 18 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் , மருதூர் அணையின் கீழக்கால் மூலம் சுமார் 8 ஆயிரம் ஏக்கர் நிலங்களும், மேலக்கால் மூலம் சுமார் 2 ஆயிரத்து 600 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன கடந்த ஆண்டு பெய்த பலத்த மழையில் அனைத்து . அணைகளும், குளங்களும் நிரம்பி வழிந்தன தாமிரபரணி ஆற்றிலும் . வெ௵ளப்பெருக்கு ஏற்பட்டு , பல ஆயிரம் கன அடி தண்ணீர் வீணாக கடலுக்கு சென்றது.

**குளங்கள் வறண்டன**

இந்த ஆண்டில் போதிய பருவமழை பெய்யாததால் , பாபநாசம், மணிமுத்தாறு உள்ளிட்ட அணைகளில் கால்வாசி அளவுக்குகூட தண்ணீர் இல்லை இதனால் தாமிரபரணி ஆற்றிலும் நீர்வரத்து இன்றி .வறண்டு கிடக்கின்றனஸ்ரீவைகுண்டம் ., மருதூர் அணைகளிலும் குறைந்த அளவே தண்ணீர் தேங்கி உள்ளது மாவட்டத்தின் பிரதான குளங்களான . கடம்பாகுளம், பெருங்குளம், சடையநேரி, புத்தன்தருவைகுளம் உள்ளிட்ட அனைத்து குளங்களும் தண்ணீரின்றி வறண்டு விட்டன இதனால் . ஆற்றுப்பாசனத்தை நம்ப ி எந்த விவசாயிகளும் விவசாய பணிகளை தொடங்கவில்லை.

**விவசாயிகள் கோரிக்கை**

மானாவாரி நிலங்களில் பயிரிடப்பட்ட உளுந்து , பாசிப்பயறு, மக்காச்சோளம், கம்பு, பருத்தி உள்ளிட்ட பயிர்களும் தண்ணீரின்றி கருகியதால் விவசாயிகள் வேதனை அடைந்து உள்ளனர் எனவே . தூத்துக்குடி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து , மழையின்றி

கருகிய பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

## கோட்டூர் வட்டாரத்தில் வயல்களில் வேளாண்மை விஞ்ஞானிகள் ஆய்வு



கோட்டூர் வட்டாரத்தில் உள்ள வயல்களில் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர்.

ஆய்வு

திருவாரூர் மாவட்டம் கோட்டூர் வட்டாரத்தில் உள்ள பெருகவாழ்ந்தான் கிராமத்தில் உள்ள வயலில் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ரெ பாஸ்கரன்., ராஜாரமேஷ்., அ காமராஜ் மற்றும். கோட்டூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ரவீந்திரன் ஆகியோர் ஆய்வு செய்தனர் அப்போது அவர்கள் கூறுகையில் ., தற்போது ஆங்காங்கே நிலவி வரும் இரவு நேர குறைந்த வெப்பநிலை காற்றில் காணப்படும் 90 சதவீதத்திற்கு அதிகமான ஈரப்பதம் ஆகிய காரணிகளால் நடவு செய்யப்பட்டுள்ள சம்பா மற்றும் தாளடி பயிரில் பாக்டீரியாவால் கருகல் நோய் தாக்குதல் பரவலாக தென்படுகிறது . எனவே விவசாயிகள் அனைவரும் கீழ்கண்ட முறைகளை பின்பற்றி . கருகல் நோயில் இருந்து நெற்பயிரை பாதுகாக்க வேண்டியது அவசியம்

கருகல் நோயை பரப்பும் பாக்டீரியா பாசன நீர் மூலமாகவும், மழை நீரானது பாதிக்கப்பட்ட பயிரின் மேல் விழுந்து அதன் மூலம் மற்ற பயிர்களுக்கும் பரவி விடும் மேலும் பெருங்காற்று வீசும்போது பயிர்கள் . ஒன்றுடன் ஒன்று உரசுவதால் உண்டாகும் சிறிய சேதம் மூலம் பாக்டீரியா

இந்த நோயில் இருந்து நெற்பயிரை காப்பாற்ற . எளிதில் பரவிவிடும் நோய் . நோய் தாக்கப்பட்ட நெற்பயிரை பிடிங்கி அழித்துவிட வேண்டும் த◌ாக்கப்பட்ட வயல்களில் இருந்து அருகில் இருக்கும் வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்சக் கூடாது நோயின் அறிகுறிகள் தென்பட்டவுன் .20 சத பசுஞ்சாணக் கரைசல் தெளிக்க வேண்டும் இதற்கு ஒரு ஏக்கருக்கு . தேவைப்படும்40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் நன்கு கலக்கி இரவு முழுவதும் ஊற வைக்க வேண்டும் மறுநாள் காலையில் . அதனை வடிகட்டி பெறப்படும் தெளிந்த கரைசலுடன் மேலும்100 லிட்டர் தண்ணீர் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு காலை நேரத்தில்◌ தெளிக்க வேண்டும்.

## குண்டடம் பகுதியில் சூறாவளி காற்றால் மக்காச்சோள பயிர்கள் வேரோடு சாய்ந்தன விவசாயிகள் கவலை



குண்டடம் பகுதியில் வீசிய பலத்த சூறாவளிக்காற்றால் சாகுபடி செய்யப்பட்டிருந்த மக்காச்சோளப்பயிர்கள் வேருடன் சாய்ந்தன.

## சூறாவளி காற்று

சென்னையில் நேற்று முன்தினம் கரையை கடந்த வார்தா புயல் சென்னையை புரட்டிப்போட்டது. அதே நேரம் திருப்பூர் மாவட்டம் முழுவதும் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டதுடன் , அவ்வப்போது லேசான சாரல் மழை பெய்தது. அதேபோல் குண்டடம் பகுதியிலும் பனித்துளிகளைப் போன்ற சாரல் பெய்தது. அப்போது பயங்கர சூறாவளிக்காற்று வீசியது.

இந்தக் காற்றின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் மேட்டுக்கடை , முத்துக்கவுண்டம்பாளையம், சந்திராபுரம், நந்தவனம்பாளையம் உள்ளிட்ட பகுதியில் சாகுபடி செய்யப்பட்டு தற்போது கதிர் தள்ளிய நிலையில் இருந்த மக்காச் சோளப்பயிர்கள் வேருடன் சாய்ந்தன. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்தது மட்டுமின்றி இந்த போகமே வீணாகிப் போனதாக கவலை தெரிவிக்கின்றனர். மேலும் ஆங்காங்கே மரங்கள் விழுந்தன. மின்கம்பங்கள் சாய்ந்தன.

இது குறித்து தும்பலப்பட்டியை சேர்ந்த விவசாயி ஈஸ்வரன் கூறியதாவது:–

## இழப்பீடு வழங்க வேண்டும்

இந்த போகத்தில் 2 ஏக்கர் பரப்பில் மக்காச்சோளம் பயிர் செய்திருந்தேன். மழை பொய்த்துப் போய் ஓரளவுதான் விளைந்திருந்தது. இந்த நிலையில் சூறாவளிக்காற்றால் மொத்த மக்காச்சோள பயிரும் சாய்ந்து விட்டன. இதனால் சுமார் ரூ. 1.20 லட்சம் இழப்பீடு ஏற்பட்டுள்ளது. இதற்கு அரசு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குண்டடம் பகுதியில் மட்டும் நூற்றுக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு இருந்த மக்காச்சோளம் சாய்ந்து விட்டன. இவ்வாறு அவர் கூறினார்.

## தொடரும் விலை சரிவு தக்காளி செடிகளை வேருடன் பிடுங்கி : அப்புறப்படுத்தும் விவசாயிகள்



தொடரும் விலை சரிவால் தக்காளி செடிகளை விவசாயிகள் வேருடன் பிடுங்கி அப்புறப்படுத்தி வருகிறார்கள்.

<u>தக்காளி விலை தொடர் சரிவு</u>

குடிமங்கலம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இந்த பகுதியில் தென்னை , வாழை, மக்காச்சோளம் ஆகியவை அதிகளவில் பயிரிடப்பட்டு வருகிறது. மேலும் , சீரான வருமானம் தரக்கூடியது என்ற நோக்கத்தில் தக்காளி , வெங்காயம், பீட்ரூட் உள்ளிட்ட காய்கறி பயிர்கள் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வந்தனர்.

இந்நிலையில் தொடர்ந்து காய்கறிகளின் விலை சரிவடைந்து வருவதால் விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது. அதிலும் தக்காளி விலை தொடர்ந்து சரிவடைந்து வருவதால் விவசாயிகள் தக்காளியை பறிக்காமல் செடிகளிலேயே விட்டு விடுகின்றனர். மேலும் , சில விவசாயிகள் வேதனையில் உச்சத்திற்கு சென்று தக்காளி செடிகளை வேரோடு பிடுங்கி எறியும் அவல நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

வேதனை

இது குறித்து பெதப்பம்பட்டியை சேர்ந்த விவசாயி பழனிச்சாமி கூறுகையில் " இயற்கை முறை விவசாயத்தில் ஆர்வம் காட்டி வருகின்றோம். இதற்கென தோட்டக் கலைத்துறை மானியத்துடன் சுமார் ரூ.18 லட்சம் செலவில் பசுமைக்குடில் அமைத்துள்ளோம். மேலும் , ரூ.25 ஆயிரம் செலவில் 18 டன் அளவுக்கு மாட்டு சாணத்தை வாங்கி உரமிட்டுள்ளோம்.

நாற்று, ஆள்கூலி, பராமரிப்பு என பல ஆயிரங்கள் செலவிட்டுள்ள நிலையில் தக்காளியின் விலை தொடர்ந்து சரிவடைந்து வருவதால் , மிகுந்த வேதனையுடன் உள்ளோம். தற்போது சுமார் 15 கிலோ எடை கொண்ட ஒரு பெட்டி தக்காளி ரூ. 40 என்ற அளவில் விற்பனையாகிறது. ஒரு கூலி ஆள் ஒரு நாளைக்கு 10 பெட்டி அளவிலான தக்காளியை பறிக்க முடிகிறது. அவர்களுக்கு கூலியாக ரூ.250 கொடுக்க வேண்டியுள்ளது.

அரசு நடவடிக்கை

இங்கிருந்து உடுமலை கொண்டு சென்று சந்தையிலுள்ள மொத்த வியாபாரிகளிடம் விற்பனை செய்வதற்காக , வண்டிக்கூலி, நுழைவு கட்டணம் என செலவு அதிகமாக உள்ளது. இருப்பினும் போதிய தொகை கிடைக்காமல் வெறுங்கையுடன் வீடும் திரும்பும் நிலை உள்ளது. எனவே தக்காளி செடிகளை முற்றிலும் பிடுங்கி அழித்து விட்டு மாற்று பயிர் செய்ய முடிவு செய்துள்ளோம். இதற்கென தக்காளி செடிகளை பிடுங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

எனவே தோட்டக்கலைத்துறையின் சார்பில் , இழப்பீடு வழங்கப்பட வேண்டும். தக்காளி உள்ளிட்ட காய்கறிகளை ஜாம் , சாஸ் உள்ளிட்ட மதிப்பு கூட்டும் பொருட்களாக மாற்றி விற்பனை செய்யும் வகையில்

தொழிற்சாலைகளை உடுமலை , பெதப்பம்பட்டி பகுதிகளில் தொடங்க முன்வர வேண்டும். என்று கூறினார்.

## பூதலூர் வட்டாரத்தில் நிலக்கடலை சாகுபடிக்கு 50% மானியத்தில் இடுபொருட்கள்

திருக்காட்டுப்பள்ளி : பூதலூர் வட்டாரத்தில் நிலக்கடலை சாகுபடிக்கு 50 சதவீத மான்யத்தில் இடுபொருட்கள வழங்கப்படுகிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பூதலூர் வட்டாரத்தை சார்ந்த செங்கிப்பட்டி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் விவசாயிகள் தற்போது நிலக்கடலை பயிர் சாகுபடி செய்து வருகின்றனர். தேசிய எண்ணெய்வித்து உற்பத்தி திட்டத்தின்கீழ் நிலக்கடலை பயிரில் செயல்விளக்கம் அமைக்க எக்டருக்கு ரூ.7,500 மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் விதைப்பு கருவி மூலம் விதைப்பதற்கு ரூ.1000, நிலக்கடலை நுண்ணூட்டம் 12.5 கிலோவுக்கு ரூ.600, களைக்கொல்லிக்கு ரூ.1,500, பயிர் பாதுகாப்பு மருந்துகளுக்கென ரூ.1,500, ஜிப்சம் 40 கிலோவுக்கு ரூ.1,200, சில்லரை செலவினம் மேற்கொள்ள ரூ.200 என ரூ.7,500 மானியமாக வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தின்கீழ் ரோட்டவேட்டர் என்னும் பண்ணைக்கருவி 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் நிலக்கடலை பயிருக்கென ரைசோபியம் உயிர் உரங்கள் ஒரு எக்ே◌டருக்கு ரூ.150 மானியத்தில் வேளாண்மை விரிவாக்க மையம் மூலம்

விநியோகிக்கப்பட்டு வருகிறது. நிலக்கடலை பயிரில் பொக்கில்லாத, திரட்சியான, அதிக எண்ணெய் சத்துடன் கூடிய மகசூல் பெறுவதற்க்கு ஜிப்சம் அவசியமாகும். விவசாயிகள் தனியார் உரக்கடையில் ஒரு எக்ே◌டருக்கு 200 கிலோ ஜிப்சம் வாங்கி பயன்படுத்தலாம்.

ஜிப்சம் வாங்கியதற்கான ரசீதை உதவி வேளாண்மை அலுவலர் பரிந்துரையுடன் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் கொடுத்தால் மானியமாக 50 சதவீத தொகை, விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். இதில் ஒரு விவசாயி அதிகபட்சமாக 2 எக்டேர் வரை மான்யம் பெறலாம். எனவே மார்கழி பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் இத்திட்டத்தில் பங்கு பெற்று பயனடையலாம். இவ்வாறு பூதலூர் வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

## பரமத்திவேலூர் பகுதியில் வாழைத்தார் விலை உயர்வு

பரமத்தி வேலூர், : நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் வாழை பயிரிட்டுள்ளனர். இங்கு சாகுபடி செய்யும் வாழை தரமாக இருப்பதால், தமிழகத்தில் உள்ள பல்வேறு மாநிலங்களுக்கு லாரிகள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. இந்நிலையில் கார்த்திகை முகூர்த்த சீசன், ஐயப்பன் கோவில் சீசன் உள்ளிட்ட காரணங்களால் வாழைத்தார் தேவை அதிகரித்துள்ளது. ஆனால் தற்போது வாழைத்தார் வரத்து பெருமளவில் குறைந்துள்ளதால், கிராக்கி ஏற்பட்டு அதன் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதன்படி, கடந்த வாரத்தில் பூவன்தார் ₹200க்கும், ரஸ்தாலி, ₹300க்கும், கற்பூரவல்லி ₹300க்கும், பச்சை நாடன் ₹400க்கும், மொந்தன் ₹400க்கும் விற்றது. இந்த வாரத்தில், பூவன்தார் ₹300க்கும், ரஸ்தாலி ₹400க்கும், கற்பூரவல்லி ₹350க்கும், பச்சை நாடன்

₹500க்கும், மொந்தன் ₹600க்கும் விற்பனையானது. விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

### வேளாண்.பல்கலை.யில் சர்வதேச கருத்தரங்கம் துவங்கியது

கோவை : தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் ஆஸ்திரேலியா சுற்றுச்சூழல் மாசுபாடு மதிப்பிடுதல் மற்றும் மீட்டுதல் ஆராய்ச்சி மையம் சார்பில் 'இந்தியாவை தூய்மைப்படுத்துதல்' என்ற தலைப்பிலான சர்வதேச கருத்தரங்கம் கோவையில் நேற்று துவங்கியது. இதுபற்றி, பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி நிருபர்களிடம் கூறியதாவது: மாசடைந்த நிலம் மற்றும் நீரை சுத்தம் செய்வது குறித்து இக்கருத்தரங்கில் புதிய வழிமுறை பெறப்படும்.

இதன் தீர்வுகளை சேகரித்து முறையான செயல்பாடு குறித்து அரசுக்கு தெரிவிக்கப்படும். அனுமதி கிடைத்தவுடன், தொழிற்சாலைகளில் நடைமுறைப்படுத்தபடும். இக்கருத்தரங்கில் 12 நாடுகளை சேர்ந்த 18 பேராசிரியர்கள் மற்றும் இந்தியாவை சேர்ந்த 359 விரிவுரையாளர்கள் பங்கேற்கின்றனர்.

கருத்தரங்கை தொடர்ந்து 2 நாட்கள் மண் வளம் மற்றும் நிலத்தடி நீர் சுத்தகரிப்பு தொடர்பாக ஆலோசனை கூட்டம் நடத்தப்படும். மேலும் சர்வதேச சுற்றுச்சூழல் மாசுபடுதல், மதிப்பிடுதல் மற்றும் மீட்டதலுக்கான மையம் வேளாண் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படும். இதன்மூலம் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து பல்வேறு நாடுகளில் உள்ள 1 லட்சத்து 44 ஆயிரம் மாசடைந்த நிலங்களை சுத்தகரிக்க முயற்சிக்கப்படும். இவ்வாறு துணை வேந்தர் ராமசாமி கூறினார்.

### மரவள்ளி விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி

க.பரமத்தி : மரவள்ளி கிழங்கு விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கரூர் மாவட்டம் க.பரமத்தி ஒன்றியத்தில் அஞ்சூர், கார்வழி, மொஞ்சனூர், துக்காச்சி, தொக்குப்பட்டி, ராஜபுரம், ஆகிய ஊராட்சி பகுதிகள்,ளுக்குபட்ட குக்கிராமங்கள் இதே போல கரூர் ஒன்றியத்தில் வேலாயுதம்பாளையம், சுற்று வட்டார பகுதிகளான திருக்காடுதுறை, நடையனூர், சேமங்கி, நொய்யல், தளவாபாளையம், ஆவரங்காட்டு புதூர், ஒலப்பாளையம், ஒரம்புபாளையம், ஆத்தூர் ஆகிய பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் மரவள்ளிக்கிழங்கில் மாவுச் சத்து அதிகம் உள்ளதால் ஜவ்வரிசி ஆலைகள் பெருமளவில் கொள்முதல் செய்து வருகின்றன. இதனால் இப்பகுதிகளில் விலையும் மரவள்ளி கிழங்குக்கு பெரும் வரவேற்பு இருக்கிறது. விவசாயிகள் நேரடியாகவும் வியாபாரிகள் மற்றும் புரோக்கர்கள் மூலம் நாமக்கல், சேலம், ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, ஆத்தூர், செல்லப்பன்பட்டி, புதன்சந்தை ஆகிய பகுதிகளில் செயல்படும் தனியார் நிறுவனங்களுக்கு ஜவ்வரிசி தயாரிக்கவும் சிப்ஸ் தயாரிக்கவும் மொத்தமாகவும் சில்லரையாகவும் டன் கணக்கில் அனுப்பி வைத்து வருகின்றனர்.

ஜவ்வரிசி மில்களில் மரவள்ளி கிழங்கை வாங்கும்போது அதில் உள்ள டார்ச் மற்றும் பாயின்ட் அடிப்படையிலும், ஜவ்வரிசி தரத்திற்கு ஏற்பவும் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. பொதுவாக ஜவ்வரிசி விலை உயரும் போது, மரவள்ளி கிழங்கு விலை அதிகரிக்கவும். வீழ்ச்சி அடையும் போது, அதனை விலை குறைத்து நிர்ணயம் செய்யப்படுகிறது.

கடந்த சில வாரங்களுக்கு முன் சிப்ஸ் தயாரிப்பவர்கள் மற்றும் ஜவ்வரிசி ஆலைகள் ஆகியவற்றிற்கு ஒரு டன் மரவள்ளி கிழங்கை ரூ. 6ஆயிரத்திற்கு பெற்றனர். கடந்த மாதத்தில் பெய்த மழை பெய்ததால் செடிகள் வாட்டம் நீங்கி துளிர்த்ததால் ஸ்டார்ச் பாயின்ட் அதிகரித்துள்ளது. இதனால் தற்போது ஒரு டன் கிழங்கு ஜவ்வரிசி ஆலைகளுக்கு ரூ.9ஆயிரத்திற்கு வாங்கிச் செல்கின்றனர். இந்த விலை உயர்வு காரணமாக மரவள்ளி கிழங்கு பயிர் செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பயிர் காப்பீடு செய்ய நாளை கடைசி நாள்

சிவகங்கை : சிவகங்கை மாவட்டத்தில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்டம் நெல்(2) சம்பா பயிருக்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் இயற்கையால் ஏற்படும் இழப்புகளில் இருந்து பயிர் விளைச்சலில் ஏற்படும் மகசூல் இழப்புகளை ஈடு செய்யும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. இதில் நெற்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.330 பிரிமியம் தொகையை பயிர்க்கடன் பெறும் மற்றும் கடன்பெறாத விவசாயிகள் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்த வேண்டும். காப்பீட்டு தொகையுடன் காப்பீடு விண்ணப்பம், கணினி சிட்டா, அடங்கல் மற்றும் ஆதார் அட்டையின் நகல் அல்லது புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை, வங்கி கணக்கு புத்தகம் ஆகியவற்றை அளிக்க வேண்டும்.

காப்பீடு செய்வதற்கான கடைசி நாள் நவ.30 என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் ரூபாய் நோட்டு பிரச்னையால் டிச.5வரை நீட்டிக்கப்பட்டது. பின்னர் மேலும் நீட்டிக்கப்பட்டு டிச.15ல் முடிவடைகிறது. கூடுதல் விபரம் அறிய தங்கள் வட்டார பகுதிகளில் உதவி வேளாண் அலுவலர்கள், துணை வேளாண் அலுவலர்கள்,

வேளாண் அலுவலர், வேளாண் உதவி இயக்குநரை அணுகலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூக்கள் விலை உயர்வு குண்டுமல்லி கிலோ ரூ.1000

சேலம் : கார்த்திகை தீபத்தையொட்டி சேலம் வ.உ.சி., பூ மார்க்கெட்டில் பூக்கள் விலை உயர்ந்தது. குண்டுமல்லி கிலோ ₹1000 என்று விற்கப்பட்டது. சேலம் மாவட்டம் முழுவதும் பரவலாக பூக்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு பறிக்கப்படும் பூக்களை விவசாயிகள் சேலம் வ.உ.சி., பூ மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். நேற்று கார்த்திகை தீபம், இன்று (13ம் தேதி) பவுர்ணமியையொட்டி பூக்களின் தேவை அதிகரிப்பால், பூ மார்க்கெட்டில் பூக்களின் விலை உயர்ந்தது.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு கிலோ ரூ.400 க்கு விற்ற குண்டுமல்லி ஒரு கிலோ ரூ.1000 என விலை உயர்ந்துள்ளது. ₹600 க்கு விற்ற சன்னமல்லி ரூ.800 எனவும், ரூ.600 க்கு விற்ற கனகாம்பரம் ரூ.800 எனவும், ரூ.25 க்கு விற்ற சாமந்தி ரூ.40 எனவும், ₹30 க்கு விற்ற செண்டுப்பூ ரூ.40 எனவும், ரூ.15 க்கு விற்ற கோழிக்கொண்டை ரூ.30 எனவும், ரூ.30 க்கு விற்ற சம்பங்கி ₹60 எனவும், ₹70 க்கு விற்ற ரோஸ் 160 எனவும், ரூ.100 க்கு விற்ற பட்டன்ரோஸ் ₹200 எனவும், ₹60 க்கு விற்ற அரளி ரூ.200 எனவும் விலை உயர்ந்தது.

## 1,160 பருத்தி மூட்டை ரூ.23 லட்சத்துக்கு ஏலம்

ராசிபுரம் : ராசிபுரத்தில் நடந்த ஏலத்தில், 1160 பருத்தி மூட்டைகள், ரூ.23 லட்சத்திற்கு விற்பனையானது. நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் கூட்டுறவு வேளாண்மை விற்பனை கூடத்தின் (ஆர்.சி.எம்.எஸ்) சார்பில்

ஆர்.கவுண்டம்பாளையத்தில் நேற்று பருத்தி ஏலம் நடந்தது. இதில் ராசிபுரம், மசக்காளிப்பட்டி, பட்டணம், சிங்களாந்தபுரம், கண்ணூர்பட்டி, கவுண்டம்பாளையம், சீராப்பள்ளி உள்ளிட்ட பல்வேறு பகுதியை சேர்ந்த விவசாயிகள் தங்களது விளைநிலங்களில் உற்பத்தி செய்த 1,160 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில் ஆர்சிஹெச் ரகம் அதிகபட்சமாக ரூ.5,869 க்கும், குறைந்தபட்சமாக ₹5,279 க்கும், டிசிஹெச் ரகம் அதிகபட்சமாக ரூ.6,791 க்கும், குறைந்தபட்சமாக ரூ.5,870 க்கும் ஏலம் போனது. இதன்மூலம் ₹23 லட்சத்துக்கு விற்பனை நடந்தது. இந்த பருத்தி மூட்டைகளை, அவிநாசி, அன்னூர், சேலம், கொங்கணாபுரம், கோவை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வாங்கிச் சென்றனர்.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை உயர்வு

நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 6 காசுகள் உயர்ந்துள்ளது. இதையடுத்து 399 காசாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடந்தது. இதில் பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் கலந்து கொண்டு, முட்டையின் விற்பனை நிலவரம் குறித்து ஆலோசித்தனர். அப்போது முட்டை விலையில் 6 காசுகள் உயர்த்தப்பட்டது. அதன்படி, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 399 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை உயர்வு, தமிழகத்தில் விற்பனை அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால், நாமக்கல் மண்டலத்தில் அதன் விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

ஒரு கிலோ முட்டைக்கோழி ₹71 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.69 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விவரம்(காசுகளில்): ஐதராபாத்- 390, விஜயவாடா-392, பர்வாலா-397, மும்பை- 432, மைசூர்- 405, பெங்களூரு- 401, டெல்லி-410, கொல்கத்தா- 452 காசுகள்.

## ஈரோடு மாவட்டத்தில் சாரல் மழை

ஈரோடு : ஈரோடு மாவட்டத்தில் நேற்று லேசான சாரல் மழை பெய்தது. அதிகபட்சமாக தாளவாடியில் 10 மில்லிமீட்டர் மழை பதிவாகி இருந்தது. மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு சாரல் மழை பெய்ய தொடங்கியது. நேற்று பகலில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதோடு அவ்வப்போது சாரல் மழையும் பெய்தது. மாவட்டத்தில் தாளவாடியில் அதிகபட்சமாக 10 மில்லிமீட்டர் மழை பதிவாகி இருந்தது. மாவட்டத்தில் பெய்த மழையளவு விபரம், ஈரோடு 2 மில்லிமீட்டர், கோபி 5, பவானி 1.8, பெருந்துறை 2.2, சத்தி 7.2, தாளவாடி 10, பவானிசாகர் 5.4, கொடிவேரி அணைக்கட்டு 4, குண்டேரிப்பள்ளம் 3, கவுந்தப்பாடி 4.8மில்லிமீட்டர் மழை பதிவாகி இருந்தது.

## பருவமழை பொய்த்ததால் போர்வெல் பாசனம் மூலம் கரும்பு விவசாயம் கட்டு ரூ.300 வரை விற்க வாய்ப்பு

விருதுநகர் : பருவமழை பொய்த்ததால் கண்மாய், கிணறுகளில் தண்ணீர் இல்லாமல், போர்வெல் மூலம் கரும்பு விவசாயம் செய்யப்படுகிறது. போதிய உற்பத்தி இல்லாததால், பொங்கலுக்கு கரும்பு கட்டு ரூ.250 முதல் ரூ.300 வரை விற்பனையாகும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். வடகிழக்கு பருவமழை பொய்த்ததால், தென்மாவட்டங்களில் கண்மாய், குளம், கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கின்றன.

மழையை நம்பி தைப்பொங்கலுக்கு பயிரிட்ட பெரும்பான்மையான கரும்புத்தோட்டங்கள் காய்ந்து விட்டன. விருதுநகர் மாவட்டம் முருகனேரி, செவலூர் பகுதிகளிலும், மதுரை மாவட்டம் நடையனேரி, மேலூர் பகுதிகளிலும் பயிரிடப்படும் தீன் கரும்பு சுவை மிகுந்ததாக கருதப்படுகிறது. இந்த பகுதிகளில் விளைவிக்கப்படும் இந்த வகை கரும்புக்கு கிராக்கி அதிகம்.

விருதுநகர் மாவட்டத்தில் மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் செவலூர், முருகனேரி பகுதிகளில் கரும்பு நட்ட பல விவசாயிகளின் கரும்பு காய்ந்து விட்டது. போர்வெல் மூலம் தண்ணீர் பாய்ச்சும் விவசாயிகளின் சிலரது கரும்பு மட்டும் விளைச்சல் கண்டுள்ளது. இது குறித்து செவலூரரை சேர்ந்த தங்கமலை கூறுகையில், 'மழை பொய்த்த நிலையில் போர்வெல் தண்ணீர் மூலம் 30 சென்ட் நிலத்தில் கரும்பு பயிரிட்டேன். 15 நாட்களுக்கு ஒரு முறை யூரியா, மருந்து தெளித்து குழந்தையைப் போல 10 மாதம் காப்பாற்றி உள்ளேன். கண்மாய், கிணறுகளில் தண்ணீர் இல்லாததால் பலரது கரும்பு காய்ந்து விட்டது. கான்ட்ராக்ட் எடுத்தவர்கள் தை மாதம் தீன்கரும்பு வெட்டுவார்கள். கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் தீன்கரும்பு பயிரிடும் பரப்பளவு குறைந்துள்ளதால் கரும்பு கட்டுக்கு ரூ.50 விலை அதிகரித்து ரூ.250 முதல் ரூ.300 வரை விற்கும்' என தெரிவித்தார்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**மீனவர்களை மட்டும் பார்த்த அமைச்சர்கள்; விவசாயிகள் கடும் எதிர்ப்பு**

மாமல்லபுரம்: காஞ்சிபுரம் மாவட்ட கடலோர புயல் பாதிப்புகளை அமைச்சர்கள் நேற்று பார்வையிட்டனர். வங்கக்கடலில் உருவான, 'வர்தா'

புயல், நேற்று முன்தினம் பகலில் கரையை கடந்தது. அப்போது, மாவட்டம் முழுவதும், சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. கடலோர பகுதிகளில் பல்வேறு இடங்களில் மரங்கள், மின் கம்பங்கள் சரிந்தன. கடலோர சிமென்ட் ஓடு, வீடுகளின் மேற்கூரை காற்றில் துாக்கி எறியப்பட்டது. கடலோர பாதிப்புகளை பார்வையிட நேற்று காலை வந்த அமைச்சர்கள் ஓ.எஸ்.மணியன், செல்லுார் ராஜு, ராஜேந்திர பாலாஜி, கே.சி.வீரமணி, சரோஜா மற்றும் மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி ஆகியோர், மாமல்லபுரம் பேரூராட்சி அலுவலகத்தில், சேத நிலவரம் குறித்து ஆலோசித்தனர். தொடர்ந்து, மீனவர்களை சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட பிரச்னைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் மீனவர்கள் வலியுறுத்தினர். இது ஒருபுறமிருக்க, அமைச்சர்கள் மீனவ பகுதியில் மட்டுமே பார்வையிட்டு, விவசாய பகுதிகளை பார்வையிடாததால், விவசாயிகள் அதிருப்தி அடைந்தனர்.

அவர்கள் கூறும் போது, 'கடற்கரை பகுதியை விட உட்புற பகுதிகளில் தான் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நெற்பயிர், தென்னை, மா மரங்கள் சாய்ந்தன. அங்கு, அமைச்சர்கள் வரவே இல்லை' என, ஆதங்கப்பட்டனர்.

**விவசாயி பலி**

கல்பாக்கம் அடுத்த வாயலுார் பெரிய காலனியைச் சேர்ந்த செல்லப்பன், 57; விவசாயி, நேற்று முன்தினம் மாலை, வயலுக்கு சென்றவர் வீடு

திரும்பவில்லை. நேற்று காலை பிணமாக கண்டுபிடிக்கப்பட்டார். புயலில் சிக்கி இறந்தார் என, கூறப்படுகிறது.

**தமிழக அரசின் பசுமையாக்குதல் திட்டத்தின்படி திண்டிவனம், மரக்காணத்திற்கு பயன் கிடைக்குமா?**

திண்டிவனம்: தமிழக அரசு பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ், திண்டிவனம், மரக்காணம் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு, இலவச மரக்கன்றுகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசு வனத்துறை மூலம் தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளுக்கு இலவசமாக மரச்செடிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும், ஐந்து கிராமங்களை தேர்வு செய்து, விருப்பமுள்ள விவசாயிகளுக்கு இந்த மரச்செடிகள் வழங்கப்படுகிறது. தமிழக அரசு மூலம், இந்த திட்டம் கடந்த உ0கக-கஉம் ஆண்டு துவங்கப்பட்டது. இந்த திட்டத்தின் மூலம், திண்டிவனம் வன சரகத்திற்கு உட்பட்ட ஐந்து கிராமங்கள் தேர்வு செய்து, விவசாயிகளுக்கு மரச்செடிகள் வழங்கப்படுகிறது.

இதுவரை கடந்த ஐந்தாண்டுகளாக செஞ்சி, வானூர் தொகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு மட்டுமே, இந்த செடிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தாண்டு (உ0கரு-களம்)கூட, வானூர் தொகுதியில் உள்ள கரசானூர், பரங்கனி, தொல்லாமூர், கடகம்பட்டு உள்ளிட்ட ஐந்து கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

அவர்களுக்கு, வழங்க செம்மரச்செடிகள், தேக்கு மரச்செடிகள் உள்ளிட்ட ௩0 ஆயிரம் மரக்கன்றுகள் தயார் நிலையில் உள்ளது. ஆனால், இதுவரை மயிலம், திண்டிவனம், மரக்காணம் போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு இந்த இலவச மரச்செடிகள் வழங்கப்பட வில்லை.

மற்ற விவசாயிகளுக்கு வழங்குவது போன்று, தங்களுக்கும் வழங்க வேண்டும் என மயிலம், திண்டிவனம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த திட்டத்தை ஆண்டு தோறும் விரிவுப்படுத்தி, திண்டிவனம், மரக்காணம், மயிலம் போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## விழுப்புரத்தில் 19ம் தேதி விவசாயிகள் குறைதீர்ப்பு

விழுப்புரம்: விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 19ம் தேதி விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம் நடக்கிறது. விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் கக்ஷம் தேதி காலை 11:00 மணிக்கு, கலெக்டர் சுப்ரமணியன் தலைமையில் விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம் நடக்கிறது.

இதில் விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் பங்கேற்று, தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக அளித்து பயன்பெறலாம் என கலெக்டர் அலுவலகம் ெவளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## பருவ மழை பொய்த்து போனதால் மேய்ச்சலுக்கு விடப்பட்ட நாற்றங்கால்

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி பகுதியில் பருவ மழை பொய்த்து போனதால், நெல் நாற்றங்காலில் மாடுகள் மேய்ச்சலுக்கு விடப்பட்டது. கள்ளக்குறிச்சி பகுதியில், இந்தாண்டு சம்பா சாகுபடிக்கு பருவ மழையை

எதிர்பார்த்து நெல் நாற்று விட்டு காத்திருந்த விவசாயிகளுக்கு பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக கள்ளக்குறிச்சி சுற்று வட்டார பகுதியில் அவ்வப்போது பெய்த மழையின் அளவு, பாசனத்திற்கு ஏற்ற வகையில் அமையவில்லை.

தற்போது கோமுகி, மணிமுக்தா அணைகள் மற்றும் ஏரிகள் அனைத்தும் வறண்டுபோய் உள்ளன. சம்பா சகுபடிக்கு நெல் நாற்று விட்ட நிலையில் தற்போது பருவ மழை பொய்த்து போனதால், நெல் நாற்றாங்கால்களை மாடுகள் விட்டு மேய்க்கப்படுகிறது. நெல் சாகுபடி செய்து தண்ணீர் பற்றாக்குறையால் பயிர்கள் அழிவதை விட, தற்போது செய்த செலவுகள் மட்டுமே நஷ்டமாக இருக்கட்டும் என்று விவசாயிகள் தரப்பில் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

கள்ளக்குறிச்சி பகுதியில், நிலத்தடி நீர் மட்டமும் நாளுக்கு நாள் குறைந்து தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதுவும் பயிர்கள் கருகும் சூழ்நிலைக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

**வரகு சாகுபடியில்... தியாகதுருகம் பகுதி விவசாயிகள் தொடர்ந்து ஆர்வம்**

தியாகதுருகம்: சர்க்கரை நோய்தீர்க்கும் அருமருந்தாக பயன்படும் வரகு பயிர் சாகுபடி செய்வதில் தியாகதுருகம் பகுதி விவசாயிகள் தொடர்ந்து ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சிறு தானிய வகையில் கம்பு, கேழ்வரகுக்கு அடுத்தபடியாக வரகு அரிசி உள்ளது. பாரம்பரிய உணவு தானியமான இதை தியாகதுருகம் பகுதியில்

சில விவசாயிகள் மட்டும் தொடர்ந்து பயிரிட்டு வருகின்றனர். மானாவரி பயிராக சாகுபடி செய்யப்படும் இது இயற்கையாக பெய்யும் மழையை கொண்டு வளர்ந்து பலன் தருகிறது.

ஆடிப்பட்டத்தில் விதைத்து 5 மாதத்தில் பலன் தருகிறது. விளைந்ததும் அறுவடை செய்து தானியம் பிரித்தெடுக்கப்படுகிறது. தானியத்தின் மீது கடினமான தோல் உள்ளது. இதன் காரணமாக உமியை நீக்கி அரிசியை பிரித்தெடுப்பது சற்று சிரமமான வேலையாகும். அரிசியை போர்த்தியுள்ள தோல் கடினமாக உள்ளதால் இவற்றிற்கு பூச்சு, பறவை ஆகியவற்றால் பாதிப்பு ஏற்படுவதில்லை.

வரகு அரசி சர்க்கரை நோயாளிகளுக்கு கைகண்ட மருந்தாகவும், முக்கிய உணவாகவும் பயன்படுகிறது. சித்த மருத்துவ குறிப்பில் இது பல்வேறு மருத்துவ குணம் கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. உடலில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்துகிறது. மூட்டுவலியை குறைக்கிறது. கல்லீரல் செயல்பாட்டை துாண்டுகிறது. கண் நரம்பு நோய்களை தடுக்கும் குணம் உண்டு. நிணநீர் சுரப்பிகளை சீராக்கும். குறிப்பாக பெண்களின் மாதவிடாய் கோளாறுகளை சரிசெய்யும். இத்தனை மருத்துவ குணம் கொண்ட வரகு உணவை சாப்பிடுவது மக்கள் மத்தியில் வழக்கொழிந்து வருகிறது.

வெளிநாட்டில் இருந்து பாக்கெட்டில் அடைத்து அதிக விலைக்கு விற்பனைக்கு வரும் ஓட்சுக்கு இணையான உணவாக வரகு விளங்குகிறது. நாகரீகம் என்ற பெயரில் அதிக விலை கொடுத்து ஓட்ஸ் பாக்கெட்டுக்களை வாங்கி செல்லும் பலர், விலை குறைவான உடலுக்கு ஆரோக்கியம் தரும் வரகு அரிசியின் மகத்துவம் தெரியாமல் உள்ளனர்.

கோதுமை, அரிசியை விட வரகு அரிசியில் நார்ச்சத்து அதிகமுள்ளது. இதில் கால்சியம், புரதம், விட்டமின் 'பி' மற்றும் தாதுப்பொருட்களும் அதிகம் உள்ளதால் விரைவில் செரிமானம் அடைந்து உடலுக்கு சக்தியை தருவதோடு மலச்சிக்கலை சரி செய்கிறது.

வரகு தானியத்தின் தோலை நன்கு நீக்காமல் உண்டால் தொண்டையில் ஒருவித ஒவ்வாமை ஏற்படும். இதன் காரணமாகவே பலரும் இதனை சாப்பிடுவதை தவிர்க்கின்றனர். குறிப்பாக வரகு அரசியை கோவில் கோபுரங்களில் வைத்து சேமிப்பது நமது முன்னோர்களின் முறையாகும். இதற்கு முக்கிய காரணம் இடியை தாங்கும் தன்மைகொண்டதாக இது உள்ளதாகும்.

கடந்த சில ஆண்டுகளாக சர்க்கரை நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், வரகு அரிசியின் முக்கியத்துவம் மக்களுக்கு புரிய துவங்கியுள்ளது. இதனால் சர்க்கரை நோயாளிகள் வரகு அரிசியில் தயாரிக்கப்படும் உணவை விரும்புகின்றனர். தற்போது நட்சத்திர ஓட்டலில் கூட வரகு அரிசியில் செய்யப்பட்ட உணவு முக்கிய மெனுவாக இடம் பிடித்துள்ளது. தியாகதுருகம் அடுத்த பொரசக்குறிச்சி, கண்டாச்சிமங்கலம், நாகலூர், கொங்கராயபாளையம், புதுஉச்சிமேடு ஆகிய கிராமங்களில் வரகு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மழை குறைந்த அளவு பெய்த போதிலும் பயிர் நன்கு செழித்து வளர்ந்து தற்போது கதிர் முற்றும் தருவாயில் உள்ளது. பலரும் விவசாயிகளிடம் நேரடியாக வரகு தானியத்தை கொள்முதல் செய்து கொள்கின்றனர்.

குறிப்பாக கோவில் திருப்பணி செய்பவர்கள் கோபுர விமானத்தில் சேகரித்து வைக்க வரகு தானியத்தை அதிகளவு வாங்கி செல்கின்றனர். குறைந்த பரப்பில் பயிரிடப்பட்டாலும் வரகு தானியத்திற்கு கிராக்கி உள்ளதால் இதனை தொடர்ந்து பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

காட்டி வருகின்றனர். இதனை அதிக அளவில் சாகுபடி செய்ய போதிய ஆலோசனைகளை வேளாண்துறை அதிகாரிகள் வழங்கி ஊக்குவிக்க வேண்டும்.

**விவசாயிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ள 'வர்தா'**

செஞ்சி: செஞ்சி பகுதியில் வர்தா புயலினால் பெய்த மழை விவசாயிகள் மத்தியில் நம்பிக் கையை ஏற்படுத்தி உள்ளது. செஞ்சி பகுதி விவசாயத்தை நம்பியுள்ள பகுதி. இந்த ஆண்டு பருவ மழை காலங்கள் கடந்து வரும் நிலையில் மழையின்றி பயிர்கள் காய்ந்து வந்தன. பல இடங்களில் மாடுகளை விட்டு நட்ட பயிர்களை மேய்த்தனர். கடந்த 1ம் தேதி பொழிந்த நடா புயலின் போதும், செஞ்சி பகுதியில் மழை இல்லாமல் போனது.

ெ◌ன்னைக்கு அருகே கரையை கடந்த வர்தா புயலினால், நேற்று முன்தினம் மதியத்திற்கு பிறகு நள்ளிரவு வரை செஞ்சி பகுதியில் விட்டு, விட்டு மழை பொழிந்தது. இந்த மழை செஞ்சியில் 24 மணி நேரத்தில் 48 மி.மீ., பதிவானது. காய்ந்து கிடந்த கரம்புகள், இந்த மழையில் ஓரளவிற்கு புழுதி ஓட்டும் நிலைக்கு வந்துள்ளன. ஆடு, மாடுகளுக்கு மேய்ச்சலுக்கு புல், செடி, கொடிகள் இனி கிடைக்கும் என்ற நம்பிக்கை கால்நடை வளர்ப்பவர்களிடம் ஏற்பட்டுள்ளது.

மழை காலம் முடியும் தருவாயில் வர்தா புயலால் மழை பொழிந்திருப்பதால், 2011 ம் ஆண்டு டிசம்பர் 30ம் தேதியன்று தானே புயலினால் பருவமழை பொழிந்ததை போன்று இந்தாண்டு மீண்டும் மழை பொழியும் என்ற நம்பிக்கை விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

**கலங்க வைத்த காற்று**

நேற்று முன்தினம் வர்தா புயலினால் மழை பொழிந்த போது கடும் சூறாவளி காற்று வீசியது. பல இடங்களில் மரங்கள் விழுந்தன. இதில் சில இடங்களில் கிணற்று பாசனம் மூலம் நடவு செய்து சில நாட்களில் அறுவடைக்கு தயாரான நெல் பயிர் காற்றினால் சாய்ந்தன. சில இடங்களில் மக்காசோளம், வாழை பயிர்களும் காற்றில் சாய்ந்தன.

## 6 பஞ்சாயத்தில் மட்டுமே வாழைக்கு காப்பீடு: பாதித்த காவேரிபுரம் விவசாயிகள் ஆவேசம்

கொளத்தூர்: கொளத்தூர் ஒன்றியத்தில், ஆறு பஞ்.,களில் மட்டுமே, வாழை சாகுபடி செய்வோர் காப்பீடு திட்டத்தில் சேர முடியும் என, அறிவித்துள்ளது இதர பஞ்., விவசாயிகளை விரக்தியில் ஆழ்த்தியுள்ளது.

கொளத்தூர் ஒன்றியத்தில், 14 பஞ்சாயத்துகள் உள்ளன. இயற்கை இடர்பாடுகளால் சேதமடையும் பயிர்களுக்கு, இழப்பீடு வழங்குவதற்காக பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ், பயிர்களுக்கு காப்பீடு செய்யப்படுகிறது. நேற்று முன்தினம் கொளத்தூர் மலையடிவார கிராமங்களில் சூறாவளி காற்று வீசியதால், லக்கம்பட்டி, சேலத்தான் காட்டுவளவு பகுதியில், 5,000 வாழை மரங்கள் சாய்ந்து சேதமானது. வாழைகளுக்கு, காப்பீடு செய்யாததால், கடும் நஷ்டம் காரணமாக வாழை சாகுபடி செய்த விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.

பாதிப்பு குறித்து, சேலத்தான்காட்டுவளவு விவசாயி தங்கவேலு கூறியதாவது: கொளத்தூர் ஒன்றியத்தில், 14 பஞ்சாயத்துகளில் பரவலாக விவசாயிகள் வாழை சாகுபடி செய்கின்றனர். காவேரிபுரம் பஞ்சாயத்து பகுதியில், 100 ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பிரதம மந்திரி காப்பீடு திட்டத்தின் கீழ், ரபி, 2016-17 பருவத்தில், கொளத்தூர்

ஒன்றியத்தில், ஆலமரத்துப்பட்டி, லக்கம்பட்டி, சிங்கிரிபட்டி, தின்னப்பட்டி, கண்ணாமூச்சி, பாலமலை ஆகிய ஆறு பஞ்.,களில் சாகுபடி செய்யப்படும் வாழைகள் மட்டுமே காப்பீடு திட்டத்தில் சேர்க்கப்படுகிறது. காவேரிபுரம் பஞ்., உள்பட இதர பஞ்சாயத்துகள், வாழை சாகுபடி செய்வோர் காப்பீடு திட்டத்தில் சேர முடியாது. இதனால், இதர பஞ்சாயத்துகளில் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்தால், காப்பீடு திட்டத்தின் கீழ் இழப்பீடு கிடைக்காது. மத்திய அரசு, விவசாயிகளின் நலன் கருதி காப்பீடு திட்டத்தை அறிவித்துள்ளது. ஆனால், அதை செயல்படுத்தும் அதிகாரிகள், ஒரு தரப்பு விவசாயிகள் மட்டுமே பலனடையும் வகையில் பாரபட்சத்துடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**கை கொடுக்காத 'வர்தா': விவசாயிகள் ஏமாற்றம்**

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி பகுதியில், எதிர்பார்த்தபடி, 'வர்தா' புயல் மழை வராததால், விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், சில ஆண்டுகளாக, போதிய மழை பெய்யவில்லை. முக்கிய குடிநீர் ஆதாரமான பனமரத்துப்பட்டி ஏரி, ஒரு சொட்டு தண்ணீர் இன்றி வறண்டு கிடக்கிறது. அதனால், கிராமங்களில் உள்ள விவசாய கிணறுகளின் நீர் மட்டம், 300 அடிக்கும் கீழ் சென்றுவிட்டது. நடப்பாண்டில் பருவ மழை, புயல் மழை பெய்யாமல், போக்கு காட்டியதால், வறட்சி தலை தூக்கியது. அரளி, பந்தல் அவரைக்காய், கொய்யா, குண்டுமல்லி உள்ளிட்ட பயிர்கள் கருக துவங்கியது. பயிர்களை காப்பாற்ற, டிராக்டரில் தண்ணீர் விலைக்கு வாங்கி பாய்ச்சினர். சமீபத்தில் உருவான, 'வர்தா' புயலால், மழை வரும் என, விவசாயிகள் நம்பிக்கையுடன் காத்திருந்தனர். ஆனால், ஒரு நாள்

இரவு மட்டும், பரவலாக சாரல் மழை பெய்தது. கன மழையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள், ஏமாற்றம் அடைந்தனர்.

**மேட்டூர் அணை வளாகத்திற்கு ஜெ., பெயர்: தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

ஆத்தூர்: காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை வெளியிட வைத்த, மறைந்த முதல்வர் ஜெயலலிதா பெயரை, மேட்டூர் அணை வளாகத்திற்கு சூட்ட வேண்டும் என, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில செயலாளர் மஞ்சினி ராமசாமி, தமிழக முதல்வருக்கு கோரிக்கை மனு அனுப்பி யுள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது: மறைந்த முதல்வர் ஜெயலலிதா, காவிரி நீர் உரிமைக்காக, உச்சநீதிமன்றம் வரை சென்றதால் தண்ணீர் வருகிறது. தர்மபுரி மாவட்டம் துவங்கி, சேலம், நாமக்கல், ஈரோடு, கருர், திருச்சி, தஞ்சாவூர், கும்ப கோணம் உட்பட பல்வேறு மாவட்டங்களில், லட்சக்கணக்கான விவசாய நிலங்கள் காவிரியால் பாசனம் மற்றும் குடிநீர் வசதி பெறுகின்றன. தமிழக மக்களின் வாழ்வாதாரமாக இருக்கும் காவிரி நீருக்காக, ஜெயலலிதா நடத்திய போராட்டத்தை போற்றும் வகையில், மேட்டூர் அணை வளாகத்திற்கு, ஜெயலலிதா வளாகம் என தமிழக அரசு பெயர் சூட்ட வேண்டும். அவ்வாறு பெயர் சூட்டினால்தான், வருங்கால சந்ததியினருக்கு டாக்டர் ஜெயலலிதா காவிரிக்காக போராடிய வரலாறு தெரியும். காவிரி என்ற பேச்சு எப்போது வந்தாலும், எந்த காலத்தில் வந்தாலும், அதில் ஜெயலலிதாவின் பெயர் நிச்சயம் இருக்கும். நதிகளை இணைக்கும் விஷயத்தில் மத்திய அரசும், மாநில அரசும் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**தரமற்ற கரும்பு சாகுபடிக்கு பரிந்துரை: ரெக்கவரி பாதிப்பால் ஆலைக்கு இழப்பு**

மோகனூர்: தரமற்ற கரும்பு ரகத்தை சாகுபடிக்கு பரிந்துரை செய்ததால், சர்க்கரை கட்டுமானம் குறைந்து, ஆலைக்கு பெரும் இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

நாமக்கல் மாவட்டம், மோகனூரில், சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ளது. இங்கு, நாமக்கல், சேலம், திருச்சி மாவட்டங்களில் உள்ள, எட்டு கோட்டங்களில் இருந்து, கரும்பு, அரவைக்கு கொண்டு வரப்படுகிறது. நடப்பு ஆண்டுக்கான அரவை, கடந்த, அக்., 29ல் துவங்கியது. அதற்காக, 3,451 ஏக்கர் நடவு கரும்பும், 4,363 ஏக்கர் மறுதாம்புக் கரும்பும் என, மொத்தம், 7,814 ஏக்கர் கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆலையின் கொள்ளவு, 4.30 லட்சம் டன். ஆனால், 3.50 லட்சம் டன் கரும்பு, அரவைக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆலை நிர்வாகம் மூலம், அதிக சர்க்கரை கட்டுமானம் (ரெக்கவரி) கொண்டது என கண்டறியப்பட்ட, புதிய பச்சை மற்றும் சிவப்பு ரக கரும்பு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், தற்போது, 7.77 சதவீதம் சர்க்கரை கட்டுமானம் கிடைத்துள்ளது. அதனால், ஆலைக்கு டன் ஒன்றுக்கு, 400 ரூபாய் வரை நஷ்டம் ஏற்படுவதாக, விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து, கரும்பு விவசாயிகள் சிலர் கூறியதாவது: கடந்த, ஐந்து ஆண்டுகளுக்கு முன், அதிக சர்க்கரை கட்டுமானம் கொண்ட, 62 ஆயிரத்து, 175 போண்டா ரகம், 6,304 என்ற பச்சை ரகம் சாகுபடி செய்வதற்கு, ஆலை நிர்வாகம் தடை செய்தது. தொடர்ந்து, புதிய பச்சை மற்றும் சிவப்பு ரகம் பரிந்துரை செய்தது. அவற்றை சாகுபடி செய்வதால்,

ஏக்கருக்கு, 55 முதல், 65 டன் மட்டுமே கரும்பு உற்பத்தியாகிறது. அதனால், சர்க்கரை கட்டுமானம், 7.77 சதவீதமாக குறைந்து, ஆலைக்கு பெரும் இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. கடந்த ஆண்டு, 8.30 சதவீதம் சர்க்கரை கட்டுமானம் கிடைத்தது. ஒரு நாளைக்கு, 2,500 டன் கரும்பு அரவை செய்யப்படுகிறது. ஒரு டன்னுக்கு, 400 ரூபாய் வரை ஆலைக்கு இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்பை ஈடு செய்ய, நிர்வாகம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பது தெரியவில்லை. இது, விவசாயிகள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**சீமை கருவேல மரத்தில் உயிர் கரி சத்து: உரமாக மாற்றி மகசூல் பெற வாய்ப்பு**

நாமக்கல்: 'ஏரி, குளம், குட்டை ஆகியவற்றை ஆக்கிரமித்துள்ள சீமை கருவேல மரங்களை, தொழில் நுட்பத்தை பயன்படுத்தி உயிர் கரி சத்து தயாரித்து மண்ணிற்கு உரமாக மாற்றுவதுடன், அதன் மூலம் அதிக மகசூல் பெறலாம்' என, நாமக்கல் ஹீல்ஸ் தொண்டு நிறுவன இயக்குனர் சதீஸ்பாபு தெரிவித்தார்.

தமிழகத்தில், ஏரி, குளம், குட்டை போன்ற நீர் நிலைகளில், சீமை கருவேல மரங்கள் ஆக்கிரமித்து, நிலத்தடி நீரை உறிஞ்சிக் கொள்வதால், நீர்மட்டம் குறைந்ததுடன், விவசாயத்துக்கும், பொதுமக்களின் பயன்பாட்டுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், சீமை கருவேல மரங்களில் இருந்து உயிர் கரி சத்து தயாரித்து, மண்ணிற்கு உரமாக மாற்றும் தொழில் நுட்பம் கண்டறியப்பட்டுள்ளது.

இதுகுறித்து, மோகனூர் ஹில்ஸ் தொண்டு நிறுவன இயக்குனர் சதீஸ்பாபு கூறியதாவது: உயிர் கரி சத்து என்பது, 'வாச்சீலியா நிலோட்டிகா' என்ற சீமை கருவேல மரக்கிளைகளை வெட்டி பதப்படுத்தப்பட்ட கரியை கரித்துகள்களாக மாற்றி இயற்கை சார்ந்த அங்கக பொருட்களை கொண்டு தயாரிக்கப்படுதாகும். இந்த உயிர் கரி சத்து, விவசாய நிலங்களில் பயன்படுத்தும் போது, மண்ணில் உள்ள நுண்ணூட்டச்சத்து பெருகவும், தண்ணீர் உடனடியாக ஆவியாகாமல் தடுக்கவும், மண்ணில் உள்ள வேதியல் பொருட்களை தன் நுண் துளைகள் மூலம் ஈர்த்து மண்ணின் தன்மை கெடாமலும் பாதுகாக்கிறது. மண்ணில் அதிகப்படியான கார்பனை சேமித்து வைப்பதால், விவசாயத்தில் அதிக மகசூல் கிடைக்க வாய்ப்பு உள்ளது. நாமக்கல் மாவட்டத்தில், 15 ஊராட்சி ஒன்றியங்களில், நிலம் உள்ள, நிலம் அற்ற விவசாயிகளுக்கு, தொடர் பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அவ்வாறு பயிற்சி பெறுபவர்களுக்கு, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து மற்றும் மாவட்ட நிர்வாகத்திடம் பேசி, சீமை கருவேல மரங்களை வெட்ட அனுமதி பெற்றுத்தரப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

### 'வர்தா' புயலால் 50 ஏக்கர் வாழைத்தோட்டம் நாசம்

அரூர்: வர்தா புயலால், பலத்த சூறாவளி காற்று வீசியதால், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில், 15 லட்சம் ரூபாய் மதிப்பிலான, 50 ஏக்கரில் நடவு செய்திருந்த வாழை மரங்கள் நாசமாயின. அரூர் அடுத்த வேடகட்டமடுவு பஞ்.,க்கு உட்பட்ட மேல்செங்கப்பாடி, கீழ்செங்கப்பாடி,

மொண்டுகுழி, முல்லைவனம் உள்ளிட்ட கிராமங்களில், 30 ஏக்கரில், ஏலக்கி ரக வாழை மரங்களை, விவசாயிகள் நடவு செய்திருந்தனர். இங்கு விளையும் வாழைப்பழங்கள் அனைத்தும், கர்நாடகா மாநிலத்திற்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படும். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு வர்தா புயல் காரணமாக வீசிய சூறாவளி காற்றால், அறுவடைக்கு தயாராக இருந்த வாழை மரங்கள் குலையுடன் சாய்ந்து விழுந்து நாசமாயின. இதனால், அப்பகுதி விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். இதேபோல், பாப்பிரெட்டிப்பட்டி, மூக்காரெட்டிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், 20 ஏக்கரில் நடவு செய்திருந்த வாழை மரங்கள், சூறாவளி காற்றுக்கு கீழே சாய்ந்தன. இதனால், அறுவடைக்கு தயாராக இருந்த ஐந்து லட்சம் ரூபாய் மதிப்பிலான, வாழைக்காய்கள் நாசமாயின.

இதுகுறித்து மூக்காரெட்டிப்பட்டியை சேர்ந்த வாழை விவசாயி அறிவழகன் கூறியதாவது: வர்தா புயல் காரணமாக, வாழை மரங்கள் சாய்ந்து விழுந்ததில், அறுவடைக்கு தயாராக இருந்த வாழைக்காய்கள் நாசமாயின. இதனால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. சேதமடைந்துள்ள வாழைத்தோட்டங்களை முறையாக ஆய்வு செய்து, விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**வேளாண் அறிவியல் நிலையத்தில் மண்வள தினம்**

கோபி: கோபி வேளாண் அறிவியல் நிலையத்தில், உலக மண்வள தினவிழா மற்றும் இரபி முன்பருவ முகாம் நடந்தது. மண்ணியல் விஞ்ஞானி சேகர் வரவேற்றார். முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்

அழகேசன் தலைமை வகித்தார். மண் வள தினம் கொண்டாடும் அவசியம் மற்றும் மண் வளத்தை பேணி காப்பது குறித்து விஞ்ஞானிகள் பேசினர். நிகழ்ச்சியில், 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். விவசாயிகளுக்கு மண்வள அட்டை மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டன.

**குடியிருப்பில் வாழை பயிரிட... தடை! மக்களுக்கு வனத்துறை அறிவிப்பு**

வால்பாறை: புலிகள் காப்பகத்துக்குட்பட்ட வால்பாறையில் வாழை பயிரிட வனத்துறையினர் தடைவிதித்துள்ளனர்.

வால்பாறை ஆனைமலை புலிகள் காப்பகத்துக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. இங்குள்ள அரிய வகை வனவிலங்குகளை பாதுகாக்கவும், பசுமை மாறாக்காடுகளை பாதுகாக்கவும் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் வால்பாறையில் சமீப காலமாக யானைகள் நடமாட்டம் அதிக அளவில் உள்ளது. வால்பாறையை சுற்றியுள்ள சோலையார், சென்னியப்பா, காஞ்சமலை, வறட்டுப்பாறை, குரங்குமுடி, முருகன் எஸ்டேட், ஊசிமலை, அக்காமலை, பன்னிமேடு, சின்கோனா ராயான் டிவிஷன் உள்ளிட்ட பல்வேறு எஸ்டேட் பகுதியில் யானைகள் தனித்தனிக்கூட்டமாக முகாமிட்டுள்ளன.

பகல் நேரத்தில் தேயிலை தோட்டத்தை ஒட்டியுள்ள பகுதியில் முகாமிடும் யானைகள், இரவு நேரத்தில் தொழிலாளர்கள் குடியிருப்பு பகுதியில் பயிரிடப்பட்டுள்ள வாழை, கொய்யா, பலா ஆகியவற்றை ருசிக்க இரவு நேரத்தில் படையெடுக்கின்றன.

**எஸ்டேட் நிர்வாகங்களுக்கு நோட்டீஸ்**

இது குறித்து வனத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

எஸ்டேட் தொழிலாளர் குடியிருப்பு பகுதியில் யானைக்கு பிடித்தமானவற்றை பயிரிடப்படுவதால், அவற்றை ருசிக்க யானைகள் நாள் தோறும் குடியிருப்பு பகுதிக்குள் படையெடுக்கின்றன.

இதனால் சில நேரங்களில் உயிரிழப்பும் ஏற்படுகிறது. இதை தடுக்கும் வகையில், குடியிருப்பு பகுதியில் வாழைகளை பயிரிட வேண்டாம் என்று, அந்தந்த எஸ்டேட் நிர்வாகத்துக்கு வனத்துறை சார்பில் நோட்டீஸ் அனுப்பியுள்ளோம்.

பெரும்பாலான எஸ்டேட் நிர்வாகங்கள் இதை கண்டுகொள்ளவில்லை. இதனால் குடியிருப்பு பகுதிக்குள் யானைகள் அடிக்கடி வந்து செல்வதால், வீடு மற்றும் கடைகளையும் சேதப்படுத்தப்படுகின்றன.

இதை தடுக்கும் வகையில் எஸ்டேட் பகுதியில் யானைக்கு பிடித்தமான வாழை உள்ளிட்ட பயிர்களை பயிரிடுவதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும். இவ்வாறு, அதிகாரிகள் கூறினர்.

**"வர்தா' புயலால் மழையை எதிர்பார்த்த விவசாயிகள்...கடும் ஏமாற்றம்! கோடையில் தண்ணீர் பிரச்னை தலைதூக்கும் அபாயம்**

திருப்பூர்: திருப்பூர் மாவட்டத்தை, வட கிழக்கு பருவ மழை ஏமாற்றி வரும் நிலையில், "வர்தா'

புயலால் மழை இருக்காது என்று, வேளாண் பல்கலை காலநிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது; மேகமூட்டத்துடன், ஒருசில இடங்களில் மழைத்தூரல் மட்டுமே இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருப்பூர் மாவட்டத்தில், நடப்பாண்டு ஜூன் மாதம் முதல், செப்., மாதம் வரையிலான, தென் மேற்கு பருவ மழை ஏமாற்றியது. ஆண்டு சராசரி மழையளவு, 124.20 மி.மீ., என்ற நிலையில், 70.60 மி.மீ., மழை மட்டுமே பெய்தது. வழக்கமாக கை கொடுக்கும், வட கிழக்கு பருவ மழையை, விவசாயிகள் மிகவும் எதிர்பார்த்திருந்தனர்.

அக்., மாதம் முதல், டிச.,மாதம் வரையிலான வட கிழக்கு பருவ மழை காலத்தில், 344.02 மி.மீ., மழை சராசரியாகும். இந்தாண்டு, அக்., மாதத்தில், 133.41 மி.மீ., மழையும்; நவ., மாதத்தில், 33.9 மி.மீ., மழை மட்டுமே பெய்தது. டிச., முதல் வாரத்தில், 19.79 மி.மீ., மழையே பெய்தது. வட கிழக்கு பருவ மழை காலம் முடிய, 15 நாட்களே உள்ள நிலையில், இதுவரை, 187 மி.மீ., மழை மட்டுமே பெய்துள்ளது. இது, வட கிழக்கு பருவ மழையின் ஆண்டு சராசரியில், பாதியளவே ஆகும்.

தென் மேற்கு பருவ மழை, வட கிழக்கு பருவ மழை இரண்டுமே ஏமாற்றியுள்ளதால், விவசாயிகள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர். தென்னை, கரும்பு உள்ளிட்ட நிலைப்பயிர்கள், பாசன ஆதாரங்கள் மற்றும் பருவ மழையை எதிர்பார்த்து சாகுபடி செய்த, மக்காச்சோளம், சோளம் மற்றும் தானிய பயிர்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.அதோடு, மாவட்டத்தில் உள்ள அணைகள், குளம், குட்டைகளும் வறண்டு போயுள்ளன. நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்து வருவதால், வரும் கோடை காலத்தில் தண்ணீர் பிரச்னையை சமாளிப்பதில் பெரும் சிக்கல் ஏற்படும் என்று கருதப்படுகிறது.

இதற்கிடையே, சென்னையை தாக்கி, பெரும் சேதத்தை ஏற்படுத்திய "வர்தா' புயல், தமிழகத்தின் வட மாவட்டங்கள் சிலவற்றில், மழையை கொண்டு வந்தது. இந்த புயல் காரணமாக, திருப்பூர் மாவட்டத்துக்கு மழை கிடைக்குமா என, விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், அதிலும் விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. "வர்தா' புயலால் திருப்பூர் மாவட்டத்துக்கு எந்த பாதிப்பும் இல்லை; பலனும் இல்லை என்ற சூழலே உள்ளது.

கோவை வேளாண் பல்கலை கால நிலை ஆராய்ச்சி மைய தலைவர் பன்னீர் செல்வம் கூறுகையில், ""வர்தா புயல் காரணமாக, திருப்பூர் மாவட்டத்தில் மழை பெய்வதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. 14 (இன்று) மற்றும் 15ம் தேதிகளில், லேசான தூரல் மட்டுமே இருக்க வாய்ப்புள்ளது. வானம் மேகமூட்டத்துடன் இருக்கும். காற்று மணிக்கு, எட்டு கி.மீ.,தூரம் என்ற அளவில் வீசும்," என்றார்.

**கடுகு செடியை பயிரிடுவதால்...விளை நிலத்துக்கு பலம்! மலை மாவட்ட விவசாயிகள் ஆர்வம்**

ஊட்டி: நீலகிரி மாவட்டத்தில், மலை காய்கறியை தாக்கும் பூச்சிகளை அழிக்க, கடுகு செடியை, விவசாயிகள் பயிரிடத் துவங்கியுள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் கேரட், முட்டைகோஸ், உருளைக் கிழங்கு சாகுபடியில் அதிகளவு விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

**பயமுறுத்தும் பூச்சிகள்**

இதில், கேரட் பயிரின் வேரை, கண்ணுக்கு தெரியாத 'நெமடோட்' எனப்படும் பூச்சி தாக்குகிறது. இதனால், கேரட்டின் உருவம், அதன் இயல்பு நிலையில் இருந்து மாறி, உருண்டை வடிவில் மாறி விடுகிறது. உருவ மாற்றத்துடன் சந்தைக்கு, விற்பனைக்காக அனுப்பப்படும் கேரட்டுக்கு உரிய விலை கிடைப்பதில்லை என்பது, விவசாயிகளின் குமுறலாக உள்ளது.

அதே போன்று, முட்டை கோஸ் சாகுபடியில், முட்டை கோசின் இலைகளில், ஓட்டைகள் அதிகளவில் இருப்பது வழக்கம். அதற்கு காரணம், முட்டை கோசை தாக்கும், 'வைர முதுகு அந்துப்பூச்சி'களின் தாக்குதல் தான். இப்பூச்சி தாக்குதலால், முட்டை கோசின் தரம் குறைந்து, விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை.

**உதவும் கடுகு**

இப்பிரச்னைகளை சமாளிக்க, ஊட்டியை சுற்றியுள்ள எமரால்டு உட்பட பல்வேறு கிராமங்களில், விவசாயிகள் பலர் தங்களது கேரட் தோட்டங்களில், கடுகு செடியை பயிரிடத் துவங்கியுள்ளனர்.

செழித்து வளரும் கடுகுப்பயிர், கேரட் பயிரின் வேரை தாக்கும் பூச்சி, முட்டைகோஸ் பயிரை தாக்கும் வைர முதுகு பூச்சிகளை கவர்ந்திழுந்து, அவை செடிகளை தாக்காமல் பாதுகாக்கிறது என, கூறப்படுகிறது.

மண்ணில் உள்ள புழுக்கள் அழிந்த பின், கடுகு செடிகளை அகற்றிவிட்டு, விவசாயிகள், கேரட், முட்டை கோஸ் சாகுபடியில் ஈடுபடுகின்றனர். இதனால், கேரட், முட்டை கோஸ் பயிரில் சேதாரம் குறைகிறது;நிலம் பலப்படுகிறது. கடுகு செடி சாகுபடியை, தோட்டக்கலை துறையும் ஊக்குவித்து வருகிறது.

**பயிற்சி சுழற்சி அவசியம்**

விவசாய நிலங்களில் கேரட், உருளைக் கிழங்கு, முட்டை கோஸ் என, மாறி, மாறி பயிர்களை சாகுபடி செய்வதன் மூலம், இத்தகைய பாதிப்புகளை தவிர்க்க முடியும் என, மத்திய மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு மைய விஞ்ஞானிகள் அறிவுறுத்தி வருகின்றனர்.

தோட்டக்கலை வருமானத்தை மட்டுமே கருதி, ஒற்றை பயிர் சாகுபடியை விவசாயிகள் தொடர்ச்சியாக மேற்கொள்வதால் தான், மண் வளம் பாதிக்கிறது; பயிர்களை பூச்சிகள் தாக்குகின்றன எனவும், விஞ்ஞானிகள் அறிவுறுத்தி வருகின்றனர்.

தாவரவியல் ஆய்வாளர்கள் கூறுகையில்,'பயிர்களை தாக்கும் பூச்சிகளை ஒழித்து, விளைப் பொருட்களுக்கு நியாயமான விலை பெற, தோட்டக்கலை மற்றும் மண்வள பாதுகாப்பு விஞ்ஞானிகளின் ஆலோசனையை பின்பற்றுவது அவசியம்' என்றனர்.

**நிலத்தை நனைத்து வரும் மழை தோட்டங்களில் தூவப்படும் விதை**

குன்னூர்: குன்னூரில் மழை பெய்து வருவதால், பூண்டு விவசாயத்திற்கான விதைக்கும் பணி துவக்கப்பட்டுள்ளது.

குன்னூர் பகுதிகளில் நடப்பாண்டு பருவ மழை பொய்த்ததால், தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், மலை காய்கறி நாற்றுகளை நடவு செய்ய, விவசாயிகள் மிகவும் சிரமப்பட்டு வந்தனர்.

குறிப்பாக, குன்னூர் எடப்பள்ளி, பந்துமை, அணியாடா, ஜெகதளா, காரக்கொரை, எல்லநள்ளி, கேத்தி உட்பட சுற்றுப்புற பகுதிகளில், தற்போது கேரட், உருளைக்கிழங்கு, டர்னிப், பீட்ரூட், முட்டைகோஸ், காலிபிளவர் உட்பட மலை காய்கறி விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 'வர்தா' புயல் காரணமாக, குன்னூரில் ஓரளவு மழை பெய்துள்ளதால், வறட்சியின் பிடியில் இருந்த விவசாய நிலங்களில் ஈரத்தன்மை ஏற்பட்டுள்ளது. இதனால், தற்போது உடனடியாக பூண்டு விவசாயத்துக்கான விதைகளை விதைக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் கூறுகையில், 'தற்போது மேட்டுப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கிலோ, 350 முதல் 400 ரூபாய் வரை கொடுத்து, பூண்டு விதைகள் வாங்கி வந்துள்ளோம். இந்த மழையின் காரணமாக பணிகளை துவக்கியுள்ள நிலையில், தொடர்ந்து மழை பெய்தால் மட்டுமே விளைச்சல் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன' என்றனர்.

**புதர் சூழ்ந்த தேயிலை தோட்டம்**

பந்தலூர்: பந்தலூர் பகுதியில் செயல்படும் டான்டீ தேயிலை தோட்டங்கள் பராமரப்பின்றி, புதர் சூழ்ந்து காணப்படுகின்றன.

தாயகம் திருப்பிய தமிழ் மக்களின் நன்மைக்காக, கூடலூர், பந்தலூரில், அரசால் அமைக்கப்பட்ட, டான்டீ தேயிலை தோட்டங்களில் சில 'டிவிஷன்' கள், பராமரிப்பின்றி, புதர் சூழ்ந்து வருகின்றன. மேலும் தேயிலைத்தோட்டங்களில் பணியாற்ற போதிய தொழிலாளர்கள் இல்லாததால், தற்போது பல தோட்டங்களும், வனமாக மாறிவருகின்றன.

மேலும் சேரம்பாடி, சேரங்கோடு மற்றும் தேவாலா டான்டீ பகுதிகளில், தேயிலை செடிகளுக்கு மேல், புற்கள் வளர்ந்துள்ளதால், பெண் தொழிலாளர்கள் தேயிலை பறிப்பதற்கு சிரமப்படும் சூழல் நிலவுகிறது. இதனால், டான்டீயில் பசுந்தேயிலை வரத்து குறைந்துள்ளதுடன், வனவிலங்குகளின் குடியிருப்பாகவும் மாறிவருகிறது. எனவே, டான்டீ தேயிலை தோட்டபகுதிகளை முழுமையான அளவில் சீரமைத்து, தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**வறண்டு போனது காவிரி: வெற்றிலைக்கு போர்வெல் நீர்**

கிருஷ்ணராயபுரம்: கிருஷ்ணராயபுரம் பகுதியில் வெற்றிலை கொடிக்காலுக்கு, போர்வெல் மோட்டார் மூலம் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. கிருஷ்ணராயபுரம் தாலுகா, கிருஷ்ணராயபுரம், திருக்காம்புலியூர், லாலாப்பேட்டை, பிள்ளாபாளையம், மகாதானபுரம், மகிளிப்பட்டி போன்ற பகுதிகளில், வெற்றிலை கொடிகள் சாகுபடி நடக்கிறது. தற்போது, காவிரியில் போதுமான தண்ணீர் இல்லாததால், வெற்றிலை கொடிக்கால் நீரின்றி வாடி வருகிறது. அதனால், விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் போடப்பட்ட போர்வெல் மோட்டார் மூலம், தண்ணீர் எடுத்து, வெற்றிலை கொடிகளுக்கு நீர் பாய்ச்சுகின்றனர். இருந்தும், செல்லாத ரூபாய் நோட்டு விவகாரத்தால், வெற்றிலை

மண்டிகளுக்கு வியாபாரிகளின் வருகை குறைந்து காணப்படுகிறது. அதனால், மண்டிக்கு வெற்றிலையை அறுவடை செய்ய முடியாமல், விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

**சம்பா பயிர் கருகிய வருத்தம்: விஷம் குடித்த விவசாயி பலி**

திருவாரூர்: திருவாரூர் அருகே, சம்பா பயிர் கருகியதால், விஷம் குடித்த விவசாயி இறந்தார். திருவாரூர் மாவட்டம், முசிரியம் கிராமத்தை சேர்ந்தவர் சேகர், 51; விவசாயி. இவருக்கு மனைவி, இரு மகன்கள் உள்ளனர். இவர், 2 ஏக்கர் நிலத்தில், சம்பா நடவு செய்திருந்தார். விவசாயம் மற்றும் வீடு கட்ட, கடன் வாங்கியுள்ளார். காவிரி தண்ணீர் இல்லாமல், சம்பா பயிர் கருகியதால், மன வருத்தத்தில் இருந்த சேகர், நவ., 24ல் விஷம் குடித்தார். திருவாரூர் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளித்தும், பலனின்றி நேற்று இறந்தார்.

**தோட்டக்கலை மாணவர்களின் கிராம அனுபவத் திட்டம்**

நிலக்கோட்டை: நிலக்கோட்டையில் தோட்டக்கலை கல்லுூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் கிராம அனுபவ திட்டத்தின் கீழ் பயிற்சியில் பங்கேற்று வருகின்றனர்.

மூன்று மாதம் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற உள்ள மாணவர்கள் செயல் விளக்க பயற்சி கூட்டத்தில் பங்கேற்றனர். விவசாயிகளிடையே குழித்தட்டு நாற்றங்கால், உயிரி உரங்கள், உரங்களை பயன்படுத்தும் விதம் குறித்து பேசினர். தோட்டக்கலை உதவி இயக்குநர் காயத்ரி தலைமையில் மாணவர்கள் பொன்முத்து, ஆனந்தன், அன்பரசு, பாலாஜிகுமரன், கோபி, கார்த்திக், கேசவன், குமரேசன் ஆகியோர் பங்கேற்றனர்.மேலும், காளான் வளர்ப்பு, அதன் பயன்பாடு

குறித்து செயல்விளக்கம் அளித்தனர். நிலக்கோட்டை பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

**மண் பரிசோதனை அவசியம்; தோட்டக்கலைத்துறை வலியுறுத்தல்**

கம்பம்: 'மண்ணை தொடர்ந்து பயன்படுத்தி அதில் உள்ள பயன்களை பெற வேண்டும் என்றால், அதனை ஆய்வக பரிசோதனைக்கு உட்படுத்தி முடிவுகளுக்கு ஏற்றவாறு விவசாயிகள் சாகுபடி செய்ய வேண்டும்,' என, கம்பம் தோட்டக்கலை அலுவலர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

அவர்கள் கூறியிருப்பதாவது:

சாகுபடி செய்வதற்கு முன்னர் நாம் சாகுபடி செய்யும் நிலத்தில் மண்ணில் உள்ள சத்துக்கள், குறைபாடு உள்ள சத்துக்கள் எவை என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். ரசாயன உரங்கள், குப்பை, பூச்சிக்கொல்லி மருந்துகள் இடப்பட்ட இடங்களில் மண்மாதிரிகள் எடுக்க கூடாது. வரப்பு, கிணற்றுப்பகுதி, நீர்வடியும் பகுதி மற்றும் நிரந்தரமாக நிழல்படும் இடங்களிலும் மண் மாதிரிகள் எடுக்க கூடாது.

நிலம் தரிசாக இருக்கும் காலத்தில் மண் மாதிரி எடுக்கலாம். 'வி' வடிவத்தில் வெட்டி உட்புற மண்ணை எடுக்காமல் இருபுறமும் சுரண்டி எடுக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 4 முதல் 7 இடங்களில் மண் மாதிரி எடுக்கலாம். சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை நிழலில் உலர்த்தி அரைகிலோ மண்ணை ஆய்வகத்திற்கு கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கும் பட்சத்தில் மாவட்ட மண் பரிசோதனை மையத்தில் மண் பரிசோதனை செய்யப்பட்டு, நிலத்தின் தன்மை குறித்த விரிவான தகவல்களை தருவர். அதற்கு ஏற்றவாறு சாகுபடி முறை, உரம் மற்றும்

பூச்சிக்கொல்லி மருந்து பயன்படுத்தலாம். இதனால் நோய் தாக்காமல் கூடுதல் மகசூல் கிடைக்கும், எனக்கூறி உள்ளனர்.

**வறண்டு கிடக்கும் பெரியகுளம் கண்மாய்; கவலையில் விவசாயிகள்**

வருஷநாடு: நரியூத்து பகுதியில் மழையின்றி பெரியகுளம் மற்றும் சிறுகுளம் கண்மாய்கள் வறண்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மூலக்கடை, நரியூத்து, மயிலாடும்பாறை, செங்குளம் பகுதிகளுக்கு மத்தியில் 190 ஏக்கர் பரப்பில் பெரியகுளம் கண்மாய் உள்ளது. இதனை ஆதாரமாகக்கொண்டு 3000க்கும் மேற்பட்ட விவசாயிகள் மானவாரி மற்றும் தோட்ட சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

மூலக்கடை, ஆலந்தளீர், முத்தலாம்பாறை பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்தால் மட்டுமே கண்மாய்களுக்கு நீர் வரத்து ஏற்படும். இங்கு போதிய மழை இல்லாததால் கண்மாய்கள் வறண்டுள்ளன. இதைச்சுற்றியுள்ள விவசாய கிணறுகளில் நிலத்தடி நீர் மட் டம் குறைந்துள்ளது. கண்மாய் தற்போது 80 ஏக்கராக சுருஙகி உள்ளது. மீதமுள்ள 110 ஏக்கர் தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து, தென்னை, இலவம் உள் ளிட் ட வருவாய் தரக் கூடிய மரங்களை வளர்த்து வைத்து விவசாயம் செய்கின்றனர். சிலர் கண்மாய்க்கு தண்ணீர் வரக் கூடிய காற்றாற்று ஓடைகளை வழிமறைத்து தடுக்கின்றனர். கண்மாயில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றியும், வைகை ஆற்று தண்ணீரை புதிய வாய்க்கால் மூலமாக இங்கு கொண்டு வந்து நீரைத்தேக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.இதனால் பாசனத்தை அதிகப்படுத்தி பயிர்களை காக்கலாம்.

**விவசாயிகள் சொல்வது என்ன**

**தூர்வார வேண்டும்**

பவுன்துரை (வைகைநகர்): மயிலாடும்பாறை, செங்குளம், நரியூத்து, மூலக்கடை பகுதிகளில் விவசாயிகளுக்கு நீர் பாசன ஆதாரமாக இருப்பது பெரியகுளம் கண்மாய். இதன் ஆக்கிரமிப்பை அகற்றி தூர் வார வேண்டும். சிறுகுளம் கண்மாயில் இருந்து பெரியகுளம் கண்மாய்க்கு புதிய வாய்க்கால் அமைத்து தண்ணீரை தேக்கி வைத்தால் இப்பகுதி விவசாய கிணறுகளில் நீர் மட்டம் உயரும்.

**சிரமம்**

அன்பில் சுந்தர பாரதம் (மயிலாடும்பாறை): கண்மாயை சிலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் மழைநீர் கண்மாய்க்கு வருவதில்லை. மழைக்காலங்களில் தண்ணீர் தேக்க முடியாமல் விவசாயிகள் பெரிதும் சிரமப்படுகின் றனர்.

**நிலத்தடி நீர் உயரும்**

அழகுமலை (நரியூத்து):பெரியகுளம் கண்மாய் மிக அதிக பரப்பளவு கொண்டது. இதில் நீரை தேக்கி வைத்தால் 3000க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன் அடைவார்கள்.மேலும் விவசாய கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் அதிகரிக்கும்.

**வரத்து குறைவால் முருங்கை விலை அதிகரிப்பு**

உத்தமபாளையம்: கார்த்திகை, தை மாதங்களில் காய்கறி விலை அதிகமாக இருக்கும். காரணம் திருமணம், சபரிமலை சீசன் என்பதால் காய்கறி விற்பனை அதிகரிக்கும். கடந்த சில வாரங்களாக காய்கறிகள் விலை குறைந்து வருகிறது. ஆனால் முருங்கை காய் விலை மட்டும்

உச்சத்தை தொட்டு நிற்கிறது. கம்பம் உழவர் சந்தையில் ஒரு கிலோ முருங்கை காய் 70 ரூபாய் வரை விற்கப்பட்டது. குறைந்தபட்சம் கிலோ 20 ரூபாய் கிடைத்தது. முருங்கை காய்க்கு அதிக பட்ச கிடைத்தது வியாபாரிகளை மகிழ்ச்சியடைய வைத்தது.

காய்கறி வியாபாரிகள் கூறுகையில், ஆண்டிபட்டி பகுதியில் முருங்கை அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. நவம்பர் இரண்டாவது வாரத்துடன் வரத்து நின்று விடும். பனி பொழிவு ஆரம்பித்தால் பூக்கள் கருகி காய்கள் வரத்து இருக்காது. எனவே தற்போது முருங்கை காய் வரத்து குறைந்துள்ளது. எனவே தான் விலை அதிகரித்து வருகிறது. பிப்ரவரி மாதம் வரை முருங்கை காய் விலை அதிகமாகத் தான் இருக்கும். அதற்கு பிறகே குறையத் துவங்கும்' என்கின்றனர்.

**பருத்தியுடன் ஊடு பயிராக அகத்தி கீரை இழப்பை ஈடுகட்ட விவசாயிகள் புதுயுக்தி**

கமுதி: கமுதியில் நெல் விவசாயத்தில் ஏற்பட்டுள்ள இழப்பை ஈடுகட்டும் விதமாக விவசாயிகள் பலர் பருத்தியுடன் ஊடு பயிராக அகத்தி கீரையை சாகுபடி செய்துள்ளனர்.

முதுகுளத்தூர், கமுதி பகுதிகளில் பருவமழை பொய்த்துவிட்டதால் 12 எக்டேரில் சாகுபடி செய்யபட்ட நெற்பயிர்கள், மிளகாய் செடிகள் கருகியது. இதனால் விவசாயிகளுக்கு பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளது. இதை ஈடுகட்டும் விதமாக பருத்தி சாகபடியை முன்கூட்டியே துவக்கியுள்ள விவசாயிகள் அதனுடன் ஊடு பயிராக அகத்தி கீரையை சாகுபடி செய்துவருகின்றனர். குறிப்பாக பேரையூர், கொல்லங்குளம்,

கருங்குளம், மருதங்கநல்லூர், நெடுங்குளம், இடைச்சியூரணி ஆகிய பகுதிகளில் 1,800 எக்டேரில் பருத்தியுடன் அகத்தி கீரை, அவரை, வெண்டை உள்ளிட்ட காய்கறிகளை சாகுபடி செய்துள்ளனர்.

இதுகுறித்து கொல்லங்குளம் விவசாயி வடிவேல் கூறுகையில், " பருத்திக்கு ஊடு பயிராக அகத்தி கீரை, அவரை சாகுபடி செய்துள்ளதால், காற்று மூலம் பரவும் நோய்களை தடுத்து பருத்தி செடிகளை பாதுகாக்கும் ஆற்றல் அகத்தி கீரைகளுக்கு உண்டு. இதனால் தான் ஊடுபயிராக அகத்தி கீரையை சாகுபடி செய்துள்ளோம். இதன்மூலம் ஓரளவு வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது," என்றார்.

**வறட்சி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க கோரிக்கை**

தேவகோட்டை: வறட்சி பாதிப்பு காரணமாக விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க சட்டசபை காங்.,தலைவர் ராமசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

முதல்வர் பன்னீர்செல்வத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது, " தமிழ்நாட்டில் சென்னையில் மழை பெய்தாலும், காலம் தவறி பெய்துள்ளது.தமிழ்நாட்டில் மற்ற பகுதிகளில் மழையில்லாமல் தற்போது கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது.சில இடங்களில் முளைத்த பயிரும் கருகி விட்ட நிலையில் ஆடு மாடுகள் பயிர்களை மேய்ந்து கொண்டு உள்ளன. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக மாற்று வேலைவாய்ப்பு, பயிர் காப்பீட்டு தொகை,உரிய நிவாரணம் கிடைக்க செய்ய வேண்டும்.

குடிநீர் பிரச்னை தென் மாவட்டங்களில் அதிக அளவில் பாதித்துள்ளது. இதனை சரி செய்வதற்கு போர்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து அதற்குரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கடிதத்தில் கோரியுள்ளார்.

**டிச.,16ல் விவசாயிகள் குறை தீர் கூட்டம்**

ராமநாதபுரம்: டிச.,16ல் ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடக்கிறது. டிச., மாதத்திற்கான விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், டிச.,16 பகல் 11:30 மணிக்கு கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் நடக்கிறது. கலெக்டர் நடராஜன் தலைமை வகிக்கிறார். விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று குறைகளை மனுவாக தெரிவித்து பயனடையலாம், என கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**நெல் பயிர்கள் அழிப்பு; எள் விதைகள் விதைப்பு**

கீழக்கரை: திருப்புல்லாணி அருகே சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகியதால் அவற்றை விவசாயிகள் உழுது அழித்துவிட்டு எள் விதைப்பு செய்கின்றனர்.

திருப்புல்லாணி, ஆர்.எஸ்.மடை, அம்மன்கோவில், குதக்கோட்டை, நம்பியான்வலசை உள்ளிட்ட பகுதிகளில் பருவமழையை எதிர்பார்த்து விவசாயிகள் வழக்கம்போல் நெல் சாகுபடி செய்தனர். அரை பருவம் ஆன நிலையில் மழை பெய்ய தவிறியதால் தண்ணீரின்றி பயிர்கள் கருகியது. வேறுவழியின்றி அவை கால்நடைகளுக்கு தீவனமாக்கப்பட்டது. நெல் விவசாயத்தில் பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளதால் துவண்டுபோன விவசாயிகள், வறட்சியை தாங்கி வளரும் எள் விதைப்பு செய்ய முடிவு

செய்துள்ளனர். இதற்காக டிராக்டர் மூலம் நிலத்தை உழுது சமன் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து ஆர்.எஸ்.மடை விவசாயி பால்சாமி கூறுகையில், “ஏக்கருக்கு 30 கிலோ டீலக்ஸ் பொன்னி ரக நெல் சாகுபடி செய்தேன்.தண்ணீர் இன்றி பயிர் கருகியதால் அவற்றை அழித்துவிட்டு மாற்று பயிராக நாட்டு ரக எள் விதைக்க முடிவுசெய்துள்ளேன். வறட்சியை தாங்கும் என்பதால் எள் பயிர்கள் கை கொடுக்கும் என்ற நம்பிக்கையில் உள்ளோம்,” என்றார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**ஆந்திராவுக்கு வரமான 'வார்தா': பெருமகிழ்ச்சியில் விவசாயிகள்**



வார்தா புயல் எச்சரிக்கையால், ஆந்திர மாநிலம், கிருஷ்ணா மாவட்டத்தில் நெற்பயிர்களை பாதுகாப்பான இடத்துக்கு எடுத்துச் செல்லும் விவசாயிகள். படம்: அப்பல் நாயுடு

'வார்தா' புயலின் சீற்றத்தால் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில், ஆந்திரப்பிரதேச விவசாயிகள் 'வார்தா' புயலை வரவேற்றுள்ளனர்.

அவர்களின் நிலங்களில் விதைப்புக்கு ஏற்ற வகையில் மிதமாக மழை பெய்துள்ளதால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் தண்ணீரின் இருப்பும் அதிகரித்துள்ளதால் விவசாயத்துக்கான ஆரம்ப கட்ட செலவுகள் குறையும் என்றும் தெரிவித்துள்ளனர்.

மழைக்காலத்தில் ஏராளமான சேதம் ஏற்படுவதாகக் கூறி நெல், மக்காச்சோளம், பருத்தி உள்ளிட்ட பருவகாலப் பயிர்களைப் பயிரிடுவதை பெரும்பாலான விவசாயிகள் நிறுத்திவிட்டனர். அதே நேரத்தில் தற்போது பருவ கால அறுவடையை முடித்த ஆந்திர கடலோர மாவட்ட விவசாயிகள் அவற்றைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டனர்.

**விவசாயிகள் கவலை**

கோதுமை, பருப்பு வகைகள் உள்ளிட்ட குளிர்காலப் பயிர்களைப் பயிரிட்ட விவசாயிகள் அதிக மழை எச்சரிக்கை காரணமாக கவலையுடன் இருந்தனர்.

ஆனால் சென்னை அருகே கரையைக் கடந்த 'வார்தா' புயல், ஆந்திரப் பிரதேசத்துக்கு நெல்லூர் தவிர்த்து மிதமான மழைப் பொழிவைத் தந்துவிட்டுச் சென்றிருக்கிறது. இதனால் ஏராளமான விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். கிழக்கு மற்றும் மேற்கு கோதாவரி, கிருஷ்ணா மற்றும் மற்ற கடலோர மாவட்ட விவசாயிகள் தங்களின் நிலத்தைப் பண்படுத்தி, விதைப்பைத் தொடங்கியுள்ளனர்.

இதுகுறித்துக் கிருஷ்ணா மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி ராமராவ் கூறும்போது, "ஆந்திர மாநிலத்தில் விவசாயத்தைத் தொடங்க ஏதுவான தட்பவெப்பம் நிலவுகிறது. மித மழைப்பொழிவு விவசாயிகளுக்குப் பயனுள்ள வகையில் இருக்கிறது. இதனால் எங்களுக்குச் செலவுகளும் குறையும்" என்றார்.

**கடவுள் காப்பாற்றிவிட்டார்**

மற்றொரு விவசாயி கோட்டேஸ்வர ராவ் பேசும்போது, "கடவுள் எங்கள் பயிர்களைக் காப்பாற்றிவிட்டார். வயல்களில் இருந்து நெல்லைச் சேகரித்த விவசாயிகள் அவற்றை மூட்டைகளாக்கி, ஆலைகளுக்கு அனுப்பிக்கொண்டிருக்கின்றனர். புயல் கிருஷ்ணா மாவட்டத்தைத் தாக்கியிருந்தால் மிக மோசமாக இழப்புகளைச் சந்தித்திருப்போம்" என்றார்.

## 'வார்தா' புயல் நிவாரணப் பணிகளுக்கு ரூ.500 கோடி ஒதுக்கீடு: முதல்வர் அறிவிப்பு

'வார்தா' புயல் நிவாரணப் பணிகளுக்கு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக இன்று அவர் வெளியிட்ட அறிக்கையில், " 'வார்தா' புயல் கடந்த 12-ம் தேதி அன்று சென்னையில் கரையைக் கடந்த போது வீசிய சூறாவளிக் காற்றினால் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. ஆயிரக்கணக்கான மரங்கள் வேருடன் சாய்ந்து விழுந்தன. மின்சார சேவை பெரிதளவில் பாதிக்கப்பட்டது. இந்த பாதிப்புகளை சீர் செய்ய தமிழக அரசின் பல்வேறு

துறைகள் ஒருங்கிணைந்து போர்க்கால அடிப்படையில் சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளன.

'வார்தா' புயல் காரணமாக ஏற்பட்ட சேதங்களை சீர்செய்யும் பணிகள் குறித்து இன்று தலைமைச் செயலகத்தில் மூத்த அமைச்சர்கள், தலைமைச் செயலாளர், அரசு ஆலோசகர், காவல் துறை தலைமை இயக்குநர், துறை செயலாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுடன் நான் ஆய்வு செய்தேன்.

இந்த ஆய்வின் அடிப்படையில், 'வார்தா' புயல் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவித் தொகை மற்றும் உடனடி உள்கட்டமைப்பு சீரமைப்புப் பணிகளுக்கு என ரூ.500 கோடியை ஒதுக்கி நான் ஆணையிட்டுள்ளேன்.

**துறை வாரியான ஒதுக்கீடு**

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ.350 கோடி, பெரு நகர சென்னை மாநகராட்சிக்கு ரூ.75 கோடி, மீனவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணத் தொகைக்கென ரூ.10 கோடி, நெடுஞ்சாலைத் துறைக்கு ரூ.25 கோடி, நிவாரணப் பணிகளுக்கென காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகங்களுக்கு தலா ரூ.10 கோடி வழங்கப்படும்.

அரசு கட்டிடங்களை சீர் செய்ய பொதுப்பணித் துறைக்கு ரூ.7 கோடி, நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கென சுகாதாரத் துறைக்கு ரூ.3 கோடி, பால் பண்ணைகளில் ஏற்பட்ட சேதாரங்களை சீர் செய்ய ரூ.50 லட்சம், போக்குவரத்து சமிக்ஞைகளை சீர் செய்ய காவல் துறைக்கு ரூ.5 கோடி, வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, இதர பூங்காக்கள் ஆகியவற்றின் சீரமைப்புப் பணிகளுக்கு வனத்துறைக்கு ரூ.2 கோடியே 50 லட்சம் வழங்கப்படும்.

மேலும், பேருந்துகள், பேருந்து பணிமனைக் கட்டிடங்கள் மற்றும் பேருந்து முனையங்களில் தற்காலிக சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள போக்குவரத்துத் துறைக்கு ரூ.2 கோடி வழங்கப்படும். அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து சீரமைப்புப் பணிகளை விரைந்து முடித்திட நான் உத்தரவிட்டுள்ளேன்" என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

**சோழிங்கநல்லூரில் 38 செ.மீ. மழை பதிவு: வடக்கு உள் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு**



'வார்தா' புயலால் அதிகபட்சமாக சோழிங்கநல்லூரில் 38 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில் வடக்கு உள் தமிழகத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை புரட்டிப் போட்ட வார்தா புயலால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. நேற்று முன்தினம் கரையைக் கடந்த இந்த புயல், தற்போது வலுவிழந்து வருகிறது.

இது தொடர்பாக சென்னை வானிலை மைய இயக்குநர் எஸ்.பாலசந்திரன் கூறியதாவது:

சென்னை அருகே திங்கள் கிழமை கரையைக் கடந்த வார்தா புயல், செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி, காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக தமிழகத்தின் வடக்கு உள் மாவட்டத்தில் தருமபுரிக்கு அருகே மையம் கொண்டுள்ளது. இது தொடர்ந்து மேற்கு திசையில் நகர்ந்து, வலுவிழந்து கொண்டே செல்லக்கூடும்.

புயல் கரையைக் கடந்தபோது, நுங்கம்பாக்கத்தில் பதிவான புள்ளிவிவரங்களின்படி புயலின் மேற்கு பகுதி கடந்தபோது மணிக்கு 114 கி.மீ. வேகத்திலும், கிழக்கு பகுதி நகர்ந்து சென்றபோது அதிகபட்சமாக 72 கி.மீ. வேகத்திலும் காற்று வீசியது.

கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சோழிங்கநல் லூரில் உள்ள சத்யபாமா பல் கலைக்கழக வளாகத்தில் 38 செ.மீ., கேவிகே காட்டுப்பாக்கத்தில் 34 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. அடுத்து வரும் 24 மணி நேரத்தில் வடக்கு உள் தமிழக மாவட்டங்களான கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கலில் பரவலாக மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**மழை 61 சதவீதம் குறைவு**

தமிழகத்தில் அக்டோபர் 1 முதல் டிசம்பர் 31-ம் தேதி வரை வடகிழக்கு பருவமழை காலமாகும். இதில் டிசம்பர் 13-ம் தேதி வரை 405 மி.மீ. மழை பெய்திருக்க வேண்டும். ஆனால் 157 மி.மீ. மழைதான் பெய்துள்ளது. இது இயல்பான மழையை விட 61 சதவீதம் குறைவு. இது, வார்தா புயல் மழைக்கு முன்பு 66 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

**புயலால் பாதித்த காஞ்சி, திருவள்ளூர் மாவட்டங்களில் அமைச்சர்கள் குழு நேரில் ஆய்வு: நிவாரண நடவடிக்கைக்கு உத்தரவு**



காஞ்சிபுரம் மாமல்லபுரம் அருகே வார்தா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுகிறார் பால்வளத்துறை அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வார்தா புயல் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகளை கண்டறியவும், நிவாரணப் பணிகளை முடுக்கிவிடவும் தமிழக அரசு சார்பில் கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜூ, சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் வி.சரோஜா,

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஓ.எஸ்.மணியன், விவசாயத்துறை அமைச்சர் ஆர்.துரைக்கண்ணு, வணிகவரித் துறை அமைச்சர் கே.சி.வீரமணி, பால்வளத்துறை அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி ஆகியோர் உள்ளடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் மாமல்லபுரம் பேரூராட்சி அலுவலக கூட்டரங்கில் மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்டவர்கள், தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள், அடிப்படை வசதிகள் மற்றும் உணவுப் பொருள்கள் வழங்கிய விவரம் குறித்து கேட்டறிந்தனர்.

இதனைத் தொடர்ந்து மனித உயிரிழப்புகள், கால்நடை உயிரிழப்புகள் மற்றும் பாதிக்கப்பட்ட வீடுகள் குறித்தும் மாவட்டத்தில் எந்தெந்த பகுதிகளில் அதிகமாக மரங்கள் விழுந்துள்ளன, மின்கம்பங்கள் விழுந்துள்ளன என்பது குறித்தும் அதனை அப்புறப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தனர்.

பின்னர் அமைச்சர்கள் தனியாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

இவர்கள் நேரடியாக பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று பொதுமக்களை சந்திந்து ஆறுதல் கூறினர். மேலும் மீட்பு பணிகளை விரைவுப்படுத்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டனர். பாதிக்கப்பட்ட மக்களை கண்டறிந்து அவர்களுக்கும் நிவராண உதவிகளையும், விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினர்.

**திருவள்ளூர்**

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு பகுதி புயலினால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

புசலால் பாதிக்கப்பட்ட லைட்ஹவுஸ் குப்பம் உள்ளிட்ட பகுதிகளை, அமைச்சர்கள் எஸ்.பி. வேலுமணி, கே.பி. அன்பழகன், விஜயபாஸ்கர், காமராஜ் ஆகியோர் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அப்போது, மீனவர்கள், நிவாரண உதவி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை அமைச்சர்களிடம் முன் வைத்தனர். அவற்றை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்த அமைச்சர்கள், அப்பகுதியில் துரிதமாக மின் விநியோகம் அளிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டனர். மாவட்ட ஆட்சியர் சுந்தரவல்லி, பொன்னேரி எம்.எல்.ஏ., சிறுணியம் பலராமன் உள்ளிட்டோர் அப்போது உடனிருந்தனர்.

**சென்னை குடிநீர் ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

சென்னை மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் ஏரிகளில் ஒன்றான புழல் ஏரியில் நீர்மட்டம் சற்று உயர்ந்துள்ளது.

சென்னை மற்றும் அண்டை மாவட்டங்களில் பெய்த பலத்த மழை காரணமாக சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

‘வார்தா’ புயலால் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் பலத்த மழை பெய்தது. சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளின் நீர்பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை பெய்ததால் பூண்டி, புழல், சோழவரம், செம்பரம்பாக்கம் ஏரிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.



இந்த 4 ஏரிகளின் மொத்த கொள்ளளவு 11 ஆயிரத்து 057 மில்லியன் கன அடியாகும். நேற்றைய நிலவரப்படி இந்த ஏரிகளில் மொத்தம் ஆயிரத்து 666 மில்லியன் கன அடி நீர் இருப்பு இருந்தது. கடந்த ஆண்டு இதே நாளில் 9 ஆயிரத்து 414 மில்லியன் கன அடி தண்ணீர் இருந்தது.

தினமணி

**வேம்பு கலந்த யூரியா உரம் மண்வளத்தை பாதுகாக்கும்: வேளாண்துறை ஆலோசனை**

மண்வளத்தைப் பாதுகாக்க வேம்பு கலந்த யூரியா பயன்படுத்தலாம் என்று வேளாண்மைத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது.

இது குறித்து கடலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ரா.சு.மனோகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பயிர்களின்

வளர்ச்சியில் தழைச்சத்தின் பங்கு மிகவும் முக்கியமானது. தழைச் சத்தானது பயிர்களுக்கு வளர்ச்சியையும் கூடுதல் மகசூலையும் அளிக்கிறது. பயிர்கள் மற்ற உரங்களைக் காட்டிலும் அதிகளவில் தழைச்சத்து உரங்களை எடுத்துக்கொள்கின்றன.

தழைச்சத்தினை பயிர்களுக்கு இயற்கை உரங்களை இடுவதன் மூலமும், உயிர் உரங்கள் மூலமும் மற்றும் ரசாயன உரங்கள் ஆகியவற்றின் மூலமாகவும் அளிக்கலாம். இவற்றில் ரசாயன உரங்களால் மட்டுமே பயிருக்குத் தேவையான தழைச்சத்தினை அதிகளவிலும், உடனடியாகவும் வழங்க இயலும். ரசாயன உரங்களில் யூரியா உரம் மூலம் 50 சதவீதம் தழைச்சத்து பயிருக்கு வழங்கப்படுகிறது.

பயிருக்குத் தேவையான தழைச்சத்தினை வேம்பு பூசாத யூரியா மூலம் அளிக்கும்போது பல்வேறு வழிகளில் ஆவியாகி விரயமாவதுடன், பயிருக்கு குறைந்த அளவே கிடைக்கிறது. மேலும், சுற்றுச் சூழலும் மாசுபடுகிறது. விவசாயிகளுக்கு உரச்செலவும் கூடுதலாகிறது.

யூரியா உரம் விரயமாவதைத் தடுக்க ஐந்து பங்கு யூரியாவை ஒருபங்கு வேப்பம்புண்ணாக்கு கலந்து பயன்படுத்த அறிவுரை வழங்கப்பட்டது. இது எளிய முறை என்றாலும் விவசாயிகள் பல்வேறு நடைமுறை காரணங்களால் கடைப்பிடிப்பதில்லை. இதனை கருத்தில் கொண்டு உரத்தயாரிப்பு நிறுவனங்கள் தங்களின் யூரியா உரத்தயாரிப்பில் 100 சதவீதம் வேம்பு பூசப்பட்ட யூரியாவினை உற்பத்தி செய்து விநியோகம் செய்ய மத்திய அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வேம்பு பூசப்பட்ட யூரியா உபயோகிப்பதனால் பயிர்களுக்கு தேவைக்கேற்ப தழைச்சத்து கிடைக்கிறது. நிலத்தடிநீர் மாசுபடுவது

குறைக்கப்படுகிறது. வேம்பானது இயற்கை பூச்சிக்கொல்லியாக செயல்படுகிறது. விவசாயிகளுக்கு மானிய விலையில் கிடைக்கும் வேம்பு பூசப்பட்ட யூரியா, விவசாய உபயோகம் அல்லாமல் வேறு தொழிற்சாலை உபயோகம் அல்லது பால் பொருள்கள் உற்பத்திக்கு செல்வது தடுக்கப்படுகிறது. தற்போது விநியோகிக்கப்படும் யூரியா முழுவதும் வேம்பு பூசப்பட்டுள்ளதால் விவசாயிகள் தனியாக வேம்பு எண்ணெய் கலக்கத் தேவையில்லை.

எனவே, விவசாயிகள் வேம்பு பூசிய யூரியா உரங்களை மட்டுமே பயன்படுத்தி அதிக மகசூல் பெற்று மண்வளத்தினை பாதுகாக்கலாம் என அதில் தெரிவித்துள்ளார்.

**நெற்பயிரில் இலைக்கருகல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்: வேளாண் விஞ்ஞானிகள்**

நெற்பயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் விளக்கமளித்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் அருகே உள்ள பெருகவாழ்ந்தான் கிராமத்தில் காவிரி ரெங்கநாதன் என்பவரது நெல்வயலில் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ரெ.பாஸ்கரன், ராஜா. ரமேஷ், அ.காமராஜ், கோட்டூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ரவீந்திரன் ஆகியோர் திங்கள் கிழமை ஆய்வு மேற்கொண்டனர் பின்பு அவர்கள் கூறியது:

தற்போது ஆங்காங்கே நிலவிவரும் இரவுநேர குறைந்த வெப்பநிலை மற்றும் காற்றில் காணப்படும் 90 சதவீதத்துக்கு அதிகமான ஈரப்பதம் ஆகிய காரணிகளால் நடவு செய்யப்பட்டுள்ள சம்பா மற்றும்

தாளடிபயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் தாக்குதல் பரவலாகத் தென்படுகிறது.



பாசனநீர் மூலமாகவும், மழைநீர் பாதிக்கப்பட்டபயிரின் மேல்விழுந்து அதன்மூலம் மற்ற பயிர்களுக்கும் பரவிவிடும். மேலும் பெருங்காற்று வீசும் போது பயிர்கள் ஒன்றுடன் ஒன்று உரசுவதால் உண்டாகும் சிறிய காயத்தின் மூலமாக இந்த பாக்டீரியாவானது எளிதாகப் பரவக்கூடியது.

பாக்டீரியா இலைக்கருகல் நோயின் அறிகுறிகள்:

இலையின் ஓரங்களில் வட்டவடிவ மஞ்சள் நிறப்புள்ளிகள் தோன்றி, இலை முழுவதும் மஞ்சள் நிறமாகி காய்ந்து உதிர்ந்து விடும். வளர்ந்த பயிர்களில் இதன் தாக்குதல் இலையின் நுனிப்பகுதி மஞ்சள் அல்லது வெளிறிய மஞ்சள் நிறநீரில் நனைந்த கீற்றுகளாக மாறத் தொடங்குவதில் ஆரம்பமாகி பின்பு அளவில் பெரிதாகிவைக் கோல் நிறமாகி, இறுதியில் பழுப்பு நிற காய்ந்த கோடுகளாக காட்சியளிக்கும். அதிகமான தாக்குதலுக்குள்ளான இலை முழுவதும் காய்ந்துவிடும்.

கட்டுப்படுத்தும் முறைகள்:

இந்நோய் தாக்கப்பட்ட இலைகளைப் பறித்து அழித்துவிட வேண்டும். நோய் தாக்கப்பட்ட வயல்களிலிருந்து அருகிலிருக்கும் வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்சக்கூடாது. நோயின் அறிகுறிகள் தென்பட்டவுடனே 20 சத பசுஞ்சாணக் கரைசல் தெளிக்க வேண்டும். இதற்கு ஒரு ஏக்கருக்கு தேவைப்படும் 40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் நன்கு கலக்கி இரவு முழுவதும் ஊற வைக்கவேண்டும். மறுநாள் காலையில் அதனை வடிகட்டி பெறப்படும் தெளிந்த கரைசலுடன் மேலும் 100 லிட்டர் தண்ணீர் கலந்து கைத் தெளிப்பான் கொண்டு காலை நேரத்தில் தெளிக்க வேண்டும்.

அல்லது ஸ்டெரெப்டோமைசின் சல்பேட் மற்றும் டெட்ராசைக்ளின் கலவை 120 கிராம் மற்றும் காப்பர் ஆக்ஸிகுளோரைடு 500 கிராம் மருந்து கலவையை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து காலை அல்லது மாலை வேளைகளில் தெளித்துக் கட்டுப்படுத்தலாம் என்றனர்.